# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## மானியக் கோரிக்கை எண்.3

## நீதி நிருவாகம்

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2014 – 2015

எஸ்.பி. வேலுமணி
நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம்,
நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை
அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2014

# பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்க எண் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1–2 |
| 2. | நீதிமன்றங்களின் படிநிலை அமைப்பு | 3 |
| 3. | நீதிமன்றங்களின் எண்ணிக்கை | 3–7 |
| 4. | மாவட்டவாரியாக நீதிமன்றங்கள் பற்றிய விவரம் | 7–8 |
| 5. | செலவினங்களின் வகைப்பாடு | 8 |
| 6. | உயர்நீதிமன்றம், சென்னை | 8–10 |
| 7. | மதுரையிலுள்ள சென்னை உயர்நீதிமன்றக் கிளை | 10–11 |
| 8. | உரிமையியல் நீதிமன்றங்கள் | 11–16 |
| 9. | குற்றவியல் நீதிமன்றங்கள் | 16–17 |
| 10. | சிறப்பு நீதிமன்றங்கள் | 18–35 |
| 11. | நிலுவையிலுள்ள வழக்குகளின் விவரம் | 35 |
| 12. | தமிழ் வழியிலான சட்ட இதழ் | 35 |
| 13. | மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டம் | 36–38 |
| 14. | பதிமூன்றாவது நிதிக்குழுவின் பரிந்துரை அடிப்படையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் | 38–46 |
| 15. | நீதிமன்ற மேலாளர்கள் | 46–47 |

| | | |
|---|---|---|
| 16. | நீதித்துறை அமைப்புகளை கணினிமயமாக்கல் | 48–52 |
| 17. | உரிமையியல் நீதிபதிகள் நியமனம் | 52 |
| 18. | நீதித்துறை பயிற்சிக் கழகம் | 52–54 |
| 19. | உயர்நீதிமன்ற நடவடிக்கைகளில் தமிழ் மொழியை பயன்படுத்துதல் | 54–55 |
| 20. | தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதி | 55 |
| 21. | தமிழ்நாடு வழக்குரைஞர்களின் எழுத்தர்கள் நல நிதி | 55–56 |
| 22. | மாண்புமிகு நீதிபதிகளுக்கு வாகன வசதி அளித்தல் | 56 |
| 23. | நீதிமன்றக் கட்டடங்கள், நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் மற்றும் இதர உள்கட்டமைப்பு வசதிகள் | 57–60 |
| 24. | 2011–2012, 2012–13 மற்றும் 2013–14ம் ஆண்டுகளில் புதிய நீதிமன்றங்கள் | 60–66 |
| 25. | பிற வசதிகள் | 66–74 |
| 26. | தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக்குழு | 74–83 |
| 27. | அரசு வழக்காடும் துறை, உயர்நீதிமன்றம், சென்னை | 84–85 |
| 28. | குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககம் | 85–91 |
| 29. | மாநில வழக்காடும் கொள்கை–2012 | 91–94 |
| 30. | சென்னை உயர்நீதிமன்ற வளாகம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வளாகத்தில் காவல் கட்டுப்பாட்டு அறை கட்டுதல் | 94–95 |

| | | |
|---|---|---|
| 31. | விடுமுறை கால குடும்ப நல நீதிமன்றங்கள் | 95 |
| 32. | 2014–2015–ம் ஆண்டின் பகுதி–2 திட்டங்கள் | 96 |
| 33. | முடிவுரை | 97 |
| | பிற்சேர்க்கை 1 முதல் 7 வரை | 99–113 |

## உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## நீதி நிருவாகம்

## மானியக் கோரிக்கை எண். 3

## கொள்கை விளக்கக் குறிப்பு 2014 – 2015

**முன்னுரை**

"நீதிவழங்கல், அரசமைப்புச் சட்டத்தின் பேராண்மை உரிமையாகும். நீதித்துறை பொதுமக்களின் நம்பிக்கை கருவூலமாகும். நமது நாட்டின் நீதிநிருவாக முறை, உலகிலேயே மிகவும் பழமைவாய்ந்ததொன்றாகும். இம்முறை, ஒரே நாளில் அல்லது தனியொரு மனிதனால் உருவாக்கப்பட்டதல்ல. இது பல தலைமுறைகளாக எண்ணற்ற மக்களின் அனுபவம், மதிநுட்பமிக்க திட்டமிடல் மற்றும் பொறுமையான உழைப்பு ஆகியவற்றின் வாயிலாகப் பெற்ற வெற்றிக்கனியாகும். இந்த நீதிமுறை கடந்த பல நூற்றாண்டுகளாக பல மாற்றங்களையும் ஏற்றங்களையும் கண்டதுடன் உலகம் முழுவதிலும் உள்ள நாடுகளின் நீதிநிருவாக முறையின் சிறந்த அம்சங்களை தன்னகத்தே ஈர்த்துக்கொண்டுள்ளது."

**மாண்புமிகு தமிழக முதல்வர்**
**சென்னை உயர்நீதிமன்றத்தின் 150 வது**
**ஆண்டு விழா**

நம் நாட்டின் அரசியலமைப்புச் சட்டமானது சட்டமன்றம், செயலாட்சி மற்றும் நீதித்துறை ஆகிய மூன்று பிரதான அங்கங்களை கொண்ட ஒப்புயர்வற்ற சட்ட ஆவணமாகும். நம் நாட்டின் அனைத்து குடிமக்களுக்கும் நீதி, சுதந்திரம் மற்றும் சமத்துவம் ஆகியவை சென்றடைவதை உறுதி செய்ய இவைகளின் பங்கு, செயல்பாடு ஆகியவற்றை தீர்மானித்து வரையறுத்துள்ளதுடன் இவை சமநிலைப்பாட்டுடன் செயல்படுவதற்கான ஒரு கட்டமைப்பினை இந்த அரசியலமைப்பு சட்டமானது வகுத்துள்ளது.

சாதாரண மக்களின் எதிர்பார்ப்பிற்கிணங்க குறிப்பாக ஏழைகள், விளிம்பு நிலையில் உள்ளவர்கள் மற்றும் வலிமையற்ற மக்களுக்கு விரைவான நீதி கிடைக்க வேண்டும் என்பதே **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா** அவர்களின் நோக்கமாகும். வழக்குகளை விரைவாக விசாரணை செய்வதும், ஏழை மக்கள் வழக்குகளை எளிதாக கையாள வகை செய்வதும், சட்ட உதவிகள் செய்வதும், வழக்குகளை முடிவுக்கு கொண்டுவர போதுமான சட்டப் பூர்வ அமைப்புகளை ஏற்படுத்துவதும் நீதி பரிபாலனத்தில் ஒரு முக்கிய நோக்கமாகும்.

**2. நீதிமன்றங்களின் படிநிலை அமைப்பு**

நமது நாட்டின் முதன்மை நீதிமன்றமாக புதுதில்லியிலுள்ள இந்திய உச்சநீதிமன்றம் திகழ்கிறது. மாநிலங்களிலுள்ள அனைத்து உயர்நீதிமன்றங்களும் உச்சநீதிமன்றத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குகின்றன. மாநிலத்திலுள்ள நீதித்துறையின் படிநிலை அமைப்பு பிற்சேர்க்கை–1 ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**3. நீதிமன்றங்களின் எண்ணிக்கை**

தமிழ்நாட்டில் மொத்தம் 968 நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில், சென்னை மாநகரில் 113 நீதிமன்றங்களும், இதர மாவட்டங்களில் 855 நீதிமன்றங்களும் இயங்கிவருகின்றன. அவற்றின் விவரம் பின்வருமாறு:

**நீதிமன்றங்கள்**

(i) மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள் –33

(ii) சிறு வழக்குகள் நீதிமன்றங்கள் – 17

(iii) மாவட்ட மற்றும் கூடுதல் மாவட்ட நீதிமன்றங்கள் – 83

(iv) சார்பு நீதிமன்றங்கள் – 122

(v) மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் –176

(vi) சென்னை பெருநகர குற்றவியல் நீதிமன்றங்கள் – 28

(vii) தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் – 29

(viii) குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் – 193

(ix) மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள்– 64

(x) தொழிலாளர் நல நீதிமன்றங்கள் – 12

(xi) குடும்பநல நீதிமன்றங்கள் – 14

(xii) பொருளாதார குற்ற வழக்குகளை விசாரிப்பதற்கென தனி நீதிமன்றங்கள் – 3

(xiii) பட்டியலின வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் (வன் கொடுமைகள் தடுப்பு) சட்டம், 1989 மற்றும் குடிமை உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1955 தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கென தனி நீதிமன்றங்கள் – 4

(xiv) இன்றியமையாப் பொருட்கள் சட்டம் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்–கென தனி நீதிமன்றங்கள் – 6

(xv) போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் தடுப்புச் சட்டத்தின்படி தொடரப்படும் வழக்குகளை விசாரிப்பதற்கென தனி நீதிமன்றங்கள் – 4

(xvi) மத்திய குற்றப்புலனாய்வுத் துறை வழக்குகளை விசாரிப்பதற்கென தனி நீதிமன்றங்கள் – **8**

(xvii) குண்டு வெடிப்பு வழக்குகளை விசாரிப்பதற்கென தனி நீதிமன்றங்கள் – **2**

(xviii) சாதிக் கலவரங்கள் குறித்த வழக்குகளை விசாரிப்பதற்கென தனி நீதிமன்றம் **–1**

(xix) மாவட்ட நீதிபதி பதவி நிலையில் மகளிர் நீதிமன்றங்கள் – 31

(xx) குற்றவியல் நடுவர் நீதிபதி பதவி நிலையில் கூடுதல் மகளிர் நீதிமன்றங்கள் **–8**

(xxi) குற்றவியல் நடுவர் நீதிபதி பதவி நிலையில் விரைவு நீதிமன்றங்கள்– **34**

(xxii) தமிழ்நாடு வைப்பீடுதாரர்கள் (நிதி நிறுவனங்களில்) நலன்காக்கும் சட்டம்,

1997 தொடர்பான வழக்குகளுக்காக தனி நீதிமன்றங்கள் – 3

(xxiii) நில எடுப்பு சம்பந்தமான வழக்குகளை விசாரிப்பதற்கென தனி நீதிமன்றங்கள் – 5

(xxiv) நில அபகரிப்பு தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கென தனி நீதிமன்றங்கள்–21

(xxv) வனக் குற்றங்கள் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கென தனி நீதிமன்றம்–1

(xxvi) சந்தனக்கட்டை தொடர்பான குற்றங்களை விசாரிப்பதற்கென சிறப்பு குற்றவியல் நடுவர் நீதிமன்றம் –1

(xxvii) ஊழல் தடுப்புச் சட்டம் தொடர்பான வழக்குகளுக்காக தனி நீதிமன்றங்கள் – 7

(xxviii) தொழில் வழக்கு தீர்ப்பாயம் –1

(xxix) மோட்டார் வாகன விபத்துகள் சம்பந்தமான வழக்குகளை விசாரிப்பதெற்கென தனி நீதிமன்றங்கள் –22

(xxx) மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தீர்ப்பாயம் –1

(xxxi) வரி மேல் முறையீட்டுத் தீர்ப்பாயம் / விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் **–13**

(xxxii) மாநில போக்குவரத்து முறையீட்டு தீர்ப்பாயம் **– 1**

(xxxiii) மாநகராட்சி நீதிமன்றம் (மாவட்ட நீதிபதி) **– 1**

(xxxiv) நடமாடும் நீதிமன்றங்கள் **– 12**

**அலுவலகங்கள்**

(xxxv) நொடித்தவர் சொத்தாட்சியர், உயர்நீதிமன்றம், சென்னை

(xxxvi) அரசு தலைமை சொத்தாட்சியர் மற்றும் அரசு பொறுப்பு சொத்தாட்சியர், சென்னை

(xxxvii) துணை அரசு சொத்தாட்சியர் மற்றும் அரசு பொறுப்பு சொத்தாட்சியர், சென்னை

## 4. மாவட்டவாரியாக நீதிமன்றங்கள் பற்றிய விவரம்

சென்னை மாநகரில் செயல்பட்டுவரும் நீதிமன்றங்கள் / தீர்ப்பாயங்களின் எண்ணிக்கை பற்றிய விவரம் மற்றும் இதர மாவட்டங்களில் செயல்பட்டுவரும் நீதிமன்றங்கள்/

தீர்ப்பாயங்களின் எண்ணிக்கை பற்றிய விவரம் முறையே பிற்சேர்க்கை–2 மற்றும் 3 ல் கொடுக்கப்பட்டுள்ளன.

## 5. செலவினங்களின் வகைப்பாடு

சென்னை உயர்நீதிமன்ற முதன்மை ஆயம் மற்றும் மதுரை கிளை ஆகியவை குறித்த செலவினங்கள், "சாட்டிய செலவினத்தின்" கீழும், நீதி நிருவாகம் குறித்த பிற செலவினங்கள் "அனுமதிக்கப்பட்ட செலவினத்தின்" கீழும் வருகின்றன.

## 6. உயர்நீதிமன்றம், சென்னை

6.1 மாநிலத்தின் உயரிய நீதி அமைப்பு சென்னை உயர்நீதிமன்றம் ஆகும். சென்னை உயர்நீதிமன்ற முதன்மை ஆயம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளைக்கு அனுமதிக்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை 60 ஆகும். உயர்நீதிமன்றம், உரிமையியல் வழக்குகளில் அசல் மனுக்களையும் மற்றும் சிறப்பு அசல் மனுக்களையும் (நீதிப்பேராணை) விசாரிக்கும் அதிகாரங்களைப் பெற்றுள்ளது. உரிமையியல் மற்றும் குற்றவியல் விவகார வழக்குகளின் மேல்முறையீட்டு விசாரணை அதிகாரமும் இந்நீதிமன்றம் பெற்றுள்ளது. உரிமையியல் தொடர்பான அசல் வழக்குகளை

பொறுத்தவரை சென்னை மாநகரத்துக்குள் எழும் ரூ.25 இலட்சத்திற்கும் அதிகமான மதிப்புள்ள வழக்குகளை உயர்நீதிமன்றம் விசாரிக்கிறது. நீதிபதிகளுக்கிடையிலான பணிகள் மாண்புமிகு தலைமை நீதிபதி அவர்களால் பிரித்தளிக்கப்படுகின்றது. சென்னை உயர்நீதிமன்ற அதிகார எல்லைக்குள் புதுச்சேரியிலுள்ள நீதிமன்றங்களும் வருகின்றன. புதுச்சேரி தொடர்பான பணிகளை கவனிக்கும் அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் குறித்த செலவு முதற்கண் தமிழ்நாடு அரசால் செய்யப்பட்டு, பின்னர் அச்செலவுத் தொகை புதுச்சேரி அரசிடமிருந்து திரும்பப் பெறப்படுகிறது.

**6.2** உயர்நீதிமன்றத்தின் நிருவாகத் தலைவர் தலைமைப் பதிவாளர் ஆவார். அவருக்கு துணையாக பதிவாளர்கள், கூடுதல் பதிவாளர், மாண்புமிகு தலைமை நீதிபதி அவர்களின் பதிவாளர் மற்றும் தனிச்செயலாளர், மாண்புமிகு தலைமை நீதிபதியின் செயலகத்தில் சிறப்புப் பணியிலுள்ள அலுவலர், நொடித்தவர் சொத்தாட்சியர், இணைப் பதிவாளர்கள் மற்றும் தனி அலுவலர் (தொடர்பு) ஆகியோர் உள்ளனர். பதிவாளர்களுக்கு உதவியாக மாஸ்டர்கள், துணை பதிவாளர்கள், துணை நொடித்தவர் சொத்தாட்சியர், உதவிப்

பதிவாளர்கள், முதன்மைக் கணக்கு அலுவலர் மற்றும் சார்– உதவிப் பதிவாளர்கள் ஆகியோர் உள்ளனர்.

**6.3** நீதிபரிபாலனம் செய்வதுடன், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி யூனியன் பகுதி உள்ளிட்ட அனைத்து சார்நிலை நீதிமன்றங்களின் முழு நிருவாகப் பொறுப்பையும் சென்னை உயர்நீதிமன்றம் மேற்கொள்கிறது.

### 7. மதுரையிலுள்ள சென்னை உயர்நீதிமன்றக்கிளை

7.1 சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையானது, 24.07.2004 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இதன் அதிகார எல்லை மதுரை, திண்டுக்கல், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, கரூர், சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் தேனி ஆகிய 13 மாவட்டங்களை உள்ளடக்கியதாகும். அசல் வழக்குகளின் அதிகார வரம்பினை தவிர்த்து, சென்னை உயர்நீதிமன்ற முதன்மை ஆயம் பெற்றுள்ள அனைத்து அதிகாரங்களையும் இந்நீதிமன்றம் கொண்டுள்ளது.

7.2 சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையின் நிருவாகத் தலைவராக பதிவாளர் (நிருவாகம்) உள்ளார். இவருக்கு துணையாக பதிவாளர் (நீதி) உள்ளார். இவர்களுக்கு

உதவியாக துணைப் பதிவாளர்கள், உதவிப் பதிவாளர்கள், கணக்கு அலுவலர் மற்றும் சார் உதவிப் பதிவாளர்கள் உள்ளனர்.

## 8. உரிமையியல் நீதிமன்றங்கள்

### 8.1 சென்னை மாநகர்

**(அ) மாநகர உரிமையியல் நீதிமன்றம், சென்னை**

மாவட்ட நீதிபதி பதவி நிலையில் 14 நீதிபதிகள் (ஒரு மகளிர் நீதிமன்ற நீதிபதி உட்பட), முதுநிலை உரிமையியல் நீதிபதி பதவி நிலையில் 18 நீதிபதிகள் மற்றும் நிருவாக பொறுப்பு வகிக்கும் உரிமையியல் நீதிபதி பதவி நிலையில் ஒரு பதிவாளர் உட்பட, சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றங்களில் மொத்தம் 33 நீதிபதிகள் உள்ளனர். இந்நீதிமன்றத்தின் அதிகாரவரம்பானது சென்னை மாநகர் எல்லை முழுமையும் கொண்டுள்ளது. வழக்கின் பண மதிப்பினை பொறுத்தமட்டில், உதவி நீதிபதி ரூ.10 இலட்சம் வரையிலும், முதன்மை நீதிபதி ரூ.10 இலட்சத்திற்கு மேற்பட்டும் ரூ.25 இலட்சத்திற்கு மிகாமலும் விசாரிக்கும் அதிகார வரம்பினைப் பெற்றுள்ளனர். ஒரு வழக்கின் பண மதிப்பு ரூ.25 இலட்சத்திற்கு மேற்படின் அவ்வழக்கு, சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட வேண்டும். சென்னை அமர்வு பிரிவிற்கு, மாநகர உரிமையியல் நீதிமன்றமே அமர்வு நீதிமன்றமாகவும் செயல்பட்டு வருகிறது.

ஒரு கூடுதல் மாநகர உரிமையியல் நீதிமன்றம், ஊழல் தடுப்புச் சட்டம், 1988–இன் கீழ் தொடரப்படும் வழக்குகளை மட்டும் விசாரிப்பதற்கென செயல்பட்டு வருகிறது.

**(ஆ) சிறு வழக்குகள் நீதிமன்றங்கள், சென்னை**

மாவட்ட நீதிபதி பதவி நிலையிலுள்ள நீதிபதி சிறு வழக்குகள் நீதிமன்றத்திற்கு தலைமை வகிக்கிறார். இவரை தவிர, முதுநிலை உரிமையியல் நீதிபதி பதவி நிலையில் 8 நீதிபதிகளும், நிருவாகத்திற்கு பொறுப்பு வகிக்கின்ற பதிவாளர் உட்பட உரிமையியல் நீதிபதி பதவி நிலையில் 8 நீதிபதிகளும் சிறு வழக்குகள் நீதிமன்றத்தில் உள்ளனர். பதிவாளர், சில குறிப்பிட்ட நிறைவேற்று மனுக்களை முடிவு செய்தல் போன்ற நீதிமன்றப் பணிகளையும் கவனிக்கிறார். இந்நீதிமன்றங்கள் 1882–ஆம் ஆண்டு மாகாணச் சிறு வழக்கு நீதிமன்றங்கள் சட்டத்தின் கீழ் வரும் சிறு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரங்களை பெற்றுள்ளன. ஐந்தாவது மற்றும் ஆறாவது சிறுவழக்கு நீதிமன்றங்கள், 1988 ம் ஆண்டு மோட்டார் வாகனச் சட்டம் தொடர்பான வழக்குகளை பிரத்யேகமாக விசாரிக்கும் தீர்ப்பாயங்களாகவும் செயல்படுகின்றன. தலைமை நீதிபதி, இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது நீதிபதிகள் மோட்டார் வாகனச் சட்டம் தொடர்பான வழக்குகளையும்

விசாரிக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளனர். பத்து முதல் பதினாறு வரையுள்ள நீதிபதிகள் சென்னை மாநகரத்திற்கான வாடகை கட்டுப்பாட்டு அதிகாரிகளாகவும் செயல்படுகின்றனர். தலைமை நீதிபதி மற்றும் இரண்டு, மூன்று, நான்கு, ஏழு மற்றும் எட்டாவது நீதிபதிகள் வாடகை கட்டுப்பாடு தொடர்பான மேல்முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தையும் பெற்றுள்ளார்கள்.

## 8.2 வெளியூர் நீதிமன்றங்கள்

### (அ) மாவட்ட நீதிமன்றங்கள்/கூடுதல் மாவட்ட நீதிமன்றங்கள்

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் புதியதாக அமைக்கப்பட்டு 25.01.2014 முதல் இயங்கி வருகின்ற கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்தை உள்ளடக்கிய 52 கூடுதல் மாவட்ட நீதிமன்றங்களும், 31 மாவட்ட நீதிமன்றங்களும் மொத்தம் 83 மாவட்ட நீதிமன்றங்கள் இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. மாநில தொழிலாளர் காப்புறுதிச் சட்டம், 1948, எஸ்டேட் ஒழிப்புச் சட்டம், 1948 மற்றும் மோட்டார் வாகனச் சட்டம், 1988 போன்ற சில குறிப்பிட்ட தனிச் சட்டங்கள் தொடர்பான சிறப்புத் தீர்ப்பாயங்களாகவும் மாவட்ட நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. மாவட்ட நீதிபதிகள் அவரவர்

பகுதிகளுக்கான அமர்வு நீதிமன்ற நீதிபதிகளாகவும் உள்ளனர். வழக்கின் பண மதிப்பை பொறுத்தமட்டில் ரூ.10 இலட்சத்திற்கு மேற்பட்டு உச்ச வரம்பின்றி விசாரிக்கும் அதிகாரத்தினை மாவட்ட நீதிபதிகள் பெற்றுள்ளனர். இவர்கள் தத்தம் பகுதியில் எழக்கூடிய உரிமையியல் மேல் முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தை பெற்றுள்ளனர். மேலும், தத்தம் ஆளுகைக்குட்பட்ட சார்நிலை நீதிமன்றங்களை ஆய்வு செய்கின்றனர். மாநில அரசின் நிதி உதவியுடன் 49 விரைவு நீதிமன்றங்கள் நிரந்தர நீதிமன்றங்களாக மாற்றப்பட்டு, கூடுதல் மாவட்ட நீதிமன்றங்களாக செயல்பட்டு வருகின்றன.

**(ஆ) சார்பு நீதிமன்றங்கள்**

இம்மாநிலத்தில் 122 சார்பு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்நீதிமன்றங்களின் அதிகார எல்லையானது உரிமையியல் நீதிமன்றச் சட்டம், 1892–ன் படி வரையறுக்கப்பட்டுள்ளது. சார்பு நீதிமன்றங்கள், உரிமையியல் வழக்குகளில் வழக்கின் பண மதிப்பை பொறுத்தமட்டில் ரூ.1,00,000/– மேற்பட்டும், ரூ.10 இலட்சத்திற்கு மிகாமல் எழும் வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் பெற்றுள்ளன. தங்கள் எல்லைக்குட்பட்ட மாவட்ட உரிமையியல் நீதிமன்ற

முடிவிற்கெதிராக ரூ.1,00,000/– மதிப்புக்குட்பட்டு தொடரப்படும் மேல்முறையீடுகளுக்கான மேல்முறையீட்டு அதிகாரத்தையும் இந்நீதிமன்றங்கள் பெற்றுள்ளன. இந்நீதிமன்றங்கள், உதவி அமர்வு நீதிமன்றங்களாகவும் மற்றும் மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தீர்ப்பாயங்களாகவும் செயல்படுகின்றன. கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை மற்றும் வேலூர் மாவட்டம், அரக்கோணம் ஆகிய இடங்களில் புதியதாக தலா ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்க ஆணை வெளியிடப்பட்டு, அந்நீதிமன்றங்கள் முறையே 25.01.2014 மற்றும் 14.03.2014 முதல் இயங்கி வருகின்றன. இவைகளுடன் கூடுதல் சார்பு நீதிமன்றம் திருப்பூரில் அமைக்க அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு 09.06.2014 முதல் இயங்கி வருகிறது.

**(இ) மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள்**

மாநிலத்தில் 176 மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் ரூ.1.00 இலட்சம் வரையிலான பண மதிப்புடைய வழக்குகளை விசாரித்து வருகின்றன. மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் ஒவ்வொன்றும் அவற்றிற்கென்று அதிகார எல்லையை பெற்றுள்ளன. மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் ரூ.20,000/– வரையிலான சிறு வழக்குகளையும் விசாரித்து வருகின்றன.

இந்நீதிமன்ற நீதிபதிகள் தங்கள் வரம்புக்குட்பட்ட பகுதிகளுக்கு வாடகை கட்டுப்பாட்டு அதிகாரிகளாகவும் செயலாற்றுகின்றனர்.

**(ஈ) மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள்**

இந்நீதிமன்றங்கள் உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளை விசாரிக்கின்றன. இம்மாநிலத்தில் 64 மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. இவற்றில் மதுரை மாவட்டம், பேரையூரில் தொடங்கப்பட்டு 02.12.2013 முதல் செயல்பட்டுவரும் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றமும் அடங்கும்.

## 9. குற்றவியல் நீதிமன்றங்கள்

### 9.1 சென்னை மாநகர்

சென்னை மாநகரில் தலைமை பெருநகர குற்றவியல் நடுவரின் நிர்வாக கட்டுப்பாட்டில் 28 பெருநகர குற்றவியல் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் முதுநிலை உரிமையியல் நீதிபதி பதவி தரத்தில் 7 பெருநகர குற்றவியல் நடுவர்களும், உரிமையியல் நீதிபதி பதவி தரத்தில் 21 பெருநகர குற்றவியல் நடுவர்களும் அடங்குவர். பெருநகர குற்றவியல் நடுவர்கள் சென்னை மாநகரில் அவரவர் அதிகார வரம்புக்குட்பட்ட காவல் நிலைய வழக்குகளை விசாரிக்கின்றனர்.

## 9.2 வெளியூர் நீதிமன்றங்கள்

### (அ) தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்

29 தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் இம்மாநிலத்தில் இயங்கி வருகின்றன. தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தின் நிருவாக கட்டுப்பாட்டில் அந்தந்த மாவட்ட குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் இயங்குகின்றன. சில வகையான வழக்குகளில் உதவி அமர்வு நீதிபதிக்குரிய அதிகாரங்கள் தலைமை குற்றவியல் நடுவர் நீதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளன.

### (ஆ) குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்

குற்றவியல் நடுவர் நீதிமன்றம் குற்றவியல் நீதி நிருவாகத்தில் கீழ்நிலையில் இயங்கும் நீதிமன்றம் ஆகும். இந்நடுவர் நீதிமன்றத்தில் ஒரு வருடத்திற்கு மேற்படாத தண்டனையோ அல்லது அபராதம் ரூபாய் ஐந்தாயிரத்திற்கு மேற்படாமலோ அல்லது இரண்டும் சேர்த்தோ விதிக்கக்கூடிய குற்ற வழக்குகள் மட்டுமே விசாரிக்கப்படுகின்றன. இந்நீதிமன்றங்கள் ஏறத்தாழ இம்மாநிலத்தில் உள்ள அனைத்து வட்டங்களிலும் இயங்கி வருகின்றன. மாநிலத்தில் 193 குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன.

## 10. சிறப்பு நீதிமன்றங்கள்

### (அ) தொழிலாளர் நல நீதிமன்றங்கள்

12 தொழிலாளர் நல நீதிமன்றங்கள் இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. அவைகளில், சென்னையில் நான்கும், வேலூரில் இரண்டும், மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, கடலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் தலா ஒன்றுமாக இயங்கி வருகின்றன. இவை தவிர, மாநிலத்தின் அனைத்து பகுதிகள் மீதும் அதிகார வரம்பு கொண்ட தொழில் தீர்ப்பாயம் ஒன்றும் சென்னையில் இயங்கி வருகிறது. தொழிலாளர் நல நீதிமன்றம் மற்றும் தொழில் தீர்ப்பாயம் ஆகியவற்றின் தலைமை அலுவலர்கள் மாவட்ட நீதிபதி பதவி தரத்தில் உள்ளனர். தொழிலாளர் நல சிறப்பு நீதிமன்றங்கள் அரசு அனுப்பி வைக்கும் தொழிலாளர் குறித்த சர்ச்சைகளையும் பாதிக்கப்பட்டவர்கள் தாக்கல் செய்யும் உரிமை கோரிக்கை மனுக்களையும் விசாரித்து தீர்ப்புரைக்கின்றன. இந்த தொழிலாளர் நல நீதிமன்றங்கள் மற்றும் தொழில் தீர்ப்பாயம் ஆகியவைகளின் நீதிபதிகள், அவரவர்கள் அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு முகாம் நீதிமன்றங்கள் நடத்தி தொழிலாளர் தொடர்பான

சர்ச்சைகள் மற்றும் இழப்பீட்டு கோரிக்கை மனுக்களை விசாரித்து தீர்ப்புரைக்கின்றனர்.

**(ஆ) பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம், 1989 மற்றும் குடிமை உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1955 தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றங்கள்**

பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம், 1989 மற்றும் குடிமை உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1955 ஆகிய சட்டங்களின் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிக்க நான்கு சிறப்பு நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. இந்நீதிமன்றங்கள் மற்றும் அவற்றின் அதிகார எல்லைகள் பற்றிய விவரம் பின்வருமாறு:—

| வ. எண். | இடத்தின் பெயர் | மாவட்ட அதிகார எல்லை |
|---|---|---|
| 1. | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி |
| 2. | தஞ்சாவூர் | (i) தஞ்சாவூர்<br>(ii) நாகப்பட்டினம்<br>(iii) திருவாரூர் |
| 3. | திருநெல்வேலி | (i) திருநெல்வேலி<br>(ii) தூத்துக்குடி<br>(iii) கன்னியாகுமரி |
| 4. | மதுரை | மதுரை |

மேலும் இரண்டு சிறப்பு நீதிமன்றங்கள் மேற்காணும் வழக்குகளை விசாரிப்பதற்கென விழுப்புரம் (கடலூருடன் சேர்த்து) மற்றும் சிவகங்கை (இராமநாதபுரம் சேர்த்து) ஆகிய இடங்களில் அமைக்க அரசு ஒப்பளித்துள்ளது. இதர மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றங்களுக்கு மேற்குறிப்பிட்ட சட்டங்களின் கீழ் வரும் வழக்குகளில் விசாரணை மேற்கொள்ள அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

**(இ) பொருளாதாரக் குற்றங்களுக்கான சிறப்பு நீதிமன்றங்கள்**

இச்சிறப்பு நீதிமன்றங்கள், மத்திய சட்டங்களை மீறுவதனால் பதிவாகும் பொருளாதாரக் குற்றங்கள் தொடர்பான வழக்குகளை விசாரிக்க அமைக்கப்பட்டுள்ளன. மூன்று சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு அவைகள் முறையே சென்னையில், மாவட்ட நீதிபதி பதவி நிலையில் இரண்டு கூடுதல் முதன்மை பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களும் (பொருளாதாரக் குற்றங்கள்–1 மற்றும் பொருளாதாரக் குற்றங்கள்–2) மற்றும் மதுரையில், முதுநிலை உரிமையியல் நீதிபதி நிலையில் கூடுதல் தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றமும் செயல்பட்டு வருகின்றன.

**(ஈ) குடும்ப நல நீதிமன்றங்கள்**

குடும்ப நல நீதிமன்றங்கள் சட்டம், 1984–ல் திருமணம் தொடர்பான வழக்குகள், குடும்ப விவகாரங்கள் ஆகியவற்றில் இணக்கத்தை கொண்டு வரவும் மற்றும் வழக்குகளை விரைந்து முடிக்கவும் குடும்பநல நீதிமன்றங்கள் அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவ்வரசு மாவட்ட நீதிபதி பதவி தரத்தில் 20 குடும்ப நல நீதிமன்றங்களை மதுரை, கோயம்புத்தூர், சேலம், திண்டுக்கல், ஈரோடு, திருநெல்வேலி, சிவகங்கை, திருவள்ளூர், செங்கல்பட்டு, விழுப்புரம், வேலூர், திருச்சிராப்பள்ளி, தருமபுரி, திருவாரூர், விருதுநகர் மற்றும் நீலகிரி ஆகிய இடங்களில் தலா ஒரு நீதிமன்றத்தையும் சென்னையில் நான்கு நீதிமன்றங்களையும் அமைக்க ஒப்பளித்துள்ளது. இவற்றில், 14 குடும்ப நல நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மேலும், கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூரில் ஒரு கூடுதல் குடும்ப நல நீதிமன்றம் அமைக்க அரசு ஒப்பளித்துள்ளது. மேலும் பணிபுரியும் வழக்காடுபவர்களின் வசதிக்காக சென்னையில் நான்கு விடுமுறை கால குடும்ப நல நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

**(உ) தமிழ்நாடு வைப்பீடுதாரர்கள் (நிதி நிறுவனங்களில்) பாதுகாப்புச் சட்டம், 1997–ன் கீழான வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள்**

தமிழ்நாடு வைப்பீடுதாரர்கள் (நிதி நிறுவனங்களில்) பாதுகாப்புச் சட்டம், 1997 [Tamil Nadu Protection of Interests of Depositors(in Financial Establishments) Act,1997]–ன்படி மூன்று சிறப்பு நீதிமன்றங்கள் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. இந்நீதிமன்றங்கள், பொருளாதார குற்றங்களான வங்கி சாரா நிதி நிறுவனங்கள் மற்றும் பதிவு செய்யப்படாத நிதி நிறுவனங்கள் சம்பந்தபட்ட மோசடி மற்றும் பணம் திருப்பிச் செலுத்தாத வழக்குகளில் சொத்துக்களை முடக்கி விற்பனை செய்து வைப்பீடுதாரர்களுக்கு திரும்ப அளித்தல் ஆகியவற்றை பிரத்யேகமாக விசாரிக்கின்றன.

**(ஊ) மத்திய குற்றப்புலனாய்வுத்துறை (CBI) வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றங்கள்**

மத்திய குற்றப் புலனாய்வுத்துறையினால் பதிவு செய்யப்படும் வழக்குகளை பிரத்யேகமாக விசாரிப்பதற்கென 8 சிறப்பு நீதிமன்றங்கள் இம்மாநிலத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில், சென்னையில் ஆறும், மதுரை மற்றும் கோயம்புத்தூரில் தலா ஒன்று வீதம் செயல்பட்டு வருகின்றன.

**(எ) ஊழல் தடுப்புச் சட்டம், 1988–ன் கீழ் வரும் வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள்**

ஊழல் தடுப்புச் சட்டம், 1988 (மத்திய சட்டம் 49/1988)–ன் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை பிரத்யேகமாக விசாரிப்பதற்கென சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் நான்கு சிறப்பு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், கூடுதலாக விழுப்புரம், சேலம், சிவகங்கை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் நான்கு சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்க அரசு ஒப்பளித்துள்ளது. இவற்றில் விழுப்புரம், சேலம், சிவகங்கை ஆகிய இடங்களில் இந்நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

**(ஏ) போதை மருந்துகள் மற்றும் மன மயக்கப் பொருட்கள் சட்டம், 1985–ன் கீழ் வரும் வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள்**

போதை மருந்துகள் மற்றும் மன மயக்கப் பொருட்கள் சட்டம், **1985–ன்** கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை பிரத்யேகமாக விசாரிப்பதற்காக நான்கு சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு சென்னையில் இரண்டும், மதுரையில் இரண்டும் செயல்பட்டு வருகின்றன.

**(ஐ) அத்தியாவசியப் பொருட்கள் சட்டம், 1955–ன் கீழ் வரும் வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள்**

அத்தியாவசியப் பொருட்கள் சட்டம், 1955–ன் கீழ் பதிவாகும் வழக்குகளை பிரத்யேகமாக விசாரிக்க மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி பதவி நிலையிலுள்ள நீதிபதியின் கீழ் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், புதுக்கோட்டை, சேலம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் தலா ஒன்று வீதம் மொத்தம் ஆறு சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

**(ஒ) சந்தனக்கட்டை தொடர்பான குற்றங்களுக்கான சிறப்பு நீதிமன்றம்**

சந்தனக்கட்டை தொடர்பான குற்ற வழக்குகளை பிரத்யேகமாக விசாரிப்பதற்கென ஒரு சிறப்பு குற்றவியல் நடுவர் நீதிமன்றம், வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

**(ஓ) இரயில்வே நீதிமன்றங்கள்**

இரயில் நிலையங்கள் மற்றும் இரயில்களில் நடைபெறும் குற்றங்கள் மற்றும் பயணச்சீட்டு இல்லாமல் பயணம் செய்வது தொடர்பான வழக்குகளை இந்திய இரயில்வே சட்டம், 1989 கீழ்

பிரத்யேகமாக விசாரணை செய்ய ஒன்பது இரயில்வே குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் வேலூர், கடலூர், கோயம்புத்தூர், சேலம், மதுரை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களிலும் சென்னை எழும்பூர் மற்றும் சென்னை சென்ட்ரல் இரயில் நிலையங்களிலும் செயல்பட்டு வருகின்றன. இந்நீதிமன்றங்களுக்கான செலவினத்தை மாநில அரசே ஏற்கின்றது. இந்நீதிமன்றங்கள் வசூலிக்கும் அபராதத்தொகை மாநில அரசின் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

**ஔ) நடமாடும் நீதிமன்றங்கள்**

மோட்டார் வாகன சட்டம், 1988 (மத்திய சட்டம் 59/1988)–ன் கீழ் பதிவு செய்யப்படும் சிறு குற்றங்கள் மற்றும் ஏனைய சட்டங்கள் தொடர்பான சிறு வழக்குகளை விசாரிக்க சென்னையில் இரண்டும் காஞ்சிபுரம், விழுப்புரம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, நாமக்கல், சேலம், ஈரோடு, திண்டுக்கல் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் தலா ஒன்று வீதம் குற்றவியல் நடுவர் நீதிபதி பதவி நிலையில் 12 நடமாடும் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இந்நீதிமன்றங்கள் அமைத்ததின் மூலம் சிறு வழக்குகள் விரைந்து முடிக்கப்படுகின்றன.

**க) 1987–ஆம் ஆண்டைய பயங்கரவாத மற்றும் சீர்குலைவு நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டம் (தடா சட்டம்) தொடர்பான சிறப்பு நீதிமன்றங்கள்**

பயங்கரவாத மற்றும் சீர்குலைவு நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டம், 1987 (தற்போது நீக்கப்பட்டது)–ன் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளை விசாரிக்க மாநிலத்தில் நான்கு தனி நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில், சென்னையில் பெருநகர உரிமையியல் நீதிமன்றத்தின் முதலாவது மற்றும் ஐந்தாவது கூடுதல் நீதிபதிகளும், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களின் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதிகளும் தடா வழக்குகளை விசாரணை செய்ய சிறப்பு நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

**ங) குண்டு வெடிப்பு வழக்குகளுக்கான கூடுதல் அமர்வு நீதிமன்றங்கள்**

குண்டு வெடிப்பு வழக்குகளை பிரத்யேகமாக விசாரணை செய்வதற்காக இரண்டு சிறப்பு நீதிமன்றங்கள் சென்னை மற்றும் கோயம்புத்தூரில் இயங்கி வருகின்றன. சென்னை பூவிருந்தவல்லியில் செயல்படும் இந்நீதிமன்றம் பொடா சட்டம், 2002 (மத்திய சட்டம் 15/2002)–ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குகளையும் விசாரணை செய்கிறது.

**ச) இனக் கலவரம் தொடர்பான வழக்குகளுக்கான அமர்வு நீதிமன்றம்**

தென்மாவட்ட இனக் கலவரம் தொடர்பான வழக்குகளை விசாரிக்க மதுரையில் ஓர் அமர்வு நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது.

**ஞ) மகளிர் நீதிமன்றங்கள் (மகிளா நீதிமன்றங்கள்)**

பெண்களுக்கெதிராக இழைக்கப்படும் குற்றங்களான மகளிரை களங்கப்படுத்துதல், கற்பழிப்பு மற்றும் மத்திய மாநில அரசுகளின் பெண்கள் தொடர்பான சமூக சட்டங்கள் குறித்த வழக்குகளை பிரத்யேகமாக விசாரணை மேற்கொள்வதற்காக மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி பதவி தரத்தில் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சேலம், பெரம்பலூர், கடலூர், செங்கல்பட்டு மற்றும் புதுக்கோட்டை ஆகிய பத்து இடங்களில் மகளிர் நீதிமன்றங்கள் (மகிளா நீதிமன்றங்கள்) செயல்பட்டு வருகின்றன. மேலும், இவ்விடங்களில் பத்து கூடுதல் மகளிர் நீதிமன்றங்கள் குற்றவியல் நடுவர் பதவி தரத்தில் ஏற்படுத்த அரசால் ஒப்பளிக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது. அவற்றில் கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், பெரம்பலூர், கடலூர், செங்கல்பட்டு மற்றும் திருநெல்வேலி ஆகிய எட்டு இடங்களில் கூடுதல் மகளிர் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு

செயல்பட்டு வருகின்றன. மேலும் தருமபுரி, திண்டுக்கல், ஈரோடு, நாகர்கோவில், கரூர், கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம், நாமக்கல், நீலகிரி, இராமநாதபுரம், சிவகங்கை, தஞ்சாவூர், தேனி, தூத்துக்குடி, திருவள்ளூர், திருவண்ணாமலை, திருவாரூர், வேலூர், விழுப்புரம், ஸ்ரீவில்லிபுத்தூர், அரியலூர் மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில் தலா ஒன்று வீதம் மாவட்ட நீதிபதி பதவி தரத்தில் **22** விரைவு மகளிர் நீதிமன்றங்கள் அமைப்பதற்கு அரசு ஒப்பளித்துள்ளது. இவற்றில் **21** நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மேலும் சென்னை மகளிர் நீதிமன்றம் **2013**–ம் ஆண்டு மட்டும் **18** பாலியல் பலாத்கார வழக்குகளில் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கியும், **90** வழக்குகளை விசாரித்து தீர்ப்பு வழங்கியும் சாதனை புரிந்துள்ளது.

**ட) மத்திய குற்றப்பிரிவு மற்றும் மாநகர குற்றப் பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை வழக்குகளுக்கான நீதிமன்றங்கள்**

சென்னை மாநகர மத்திய குற்றப்பிரிவால் பதிவு செய்யப்படும் மோசடி வழக்குகள் மற்றும் குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வு (CBCID) துறையின் சென்னை மாநகர வழக்குகளை பிரத்யேகமாக விசாரணை செய்ய சென்னையில்

முதுநிலை உரிமையியல் நீதிபதி பதவி தரத்தில் ஒரு புதிய நீதிமன்றம் அமைக்க அரசு ஒப்பளித்துள்ளது.

**ண) மாலை நேர நீதிமன்றங்கள்**

தேங்கிக்கிடக்கும் சிறு வழக்குகளைத் துரிதமாக விசாரணை செய்து மற்ற நிரந்தர நீதிமன்றங்களின் பணிச்சுமையைக் குறைப்பதுடன், நீதிமன்ற நேரத்தினையும் சேமிக்க மாலை நேர நீதிமன்றங்கள் உதவுகின்றன. இம்மாநிலத்தில் 53 மாலை நேர நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மேலும், மாவட்ட நீதிபதி / சார்பு நீதிபதி/குற்றவியல் நடுவர் ஆகிய பதவி தரத்தில் உள்ள நீதிபதிகளைக் கொண்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் மூன்று நீதிமன்றங்கள் வீதம் 30 மாவட்டத்திற்கு 90 மாலை நேர நீதிமன்றங்கள் ரூ.3.92 கோடி செலவில் அமைப்பதற்கு அரசு ஒப்பளித்துள்ளது. மேலும் மாவட்ட நீதிபதி பதவி தரத்தில் 2 நீதிமன்றங்களும், முதுநிலை உரிமையியல் நீதிபதி பதவி தரத்தில் 21 நீதிமன்றங்களும், உரிமையியல் நீதிபதி பதவி தரத்தில் 8 நீதிமன்றங்களும், மொத்தம் 31 மாலை நேர நீதிமன்றங்கள் ரூ.1.34 கோடி செலவில் அமைக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

### த) விரைவு நீதிமன்றங்கள் (குற்றவியல் நடுவர் பதவி தரத்தில்)

தமிழகத்தில் உள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள வழக்குகளைத் தீர்ப்பதற்காக, தமிழக அரசால், குற்றவியல் நடுவர் பதவி தரத்தில் 50 விரைவு நீதிமன்றங்களை அமைக்க அரசாணை வெளியிடப்பட்டது. இதில் திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்திலுள்ள விரைவு நீதிமன்றம் குற்றவியல் நடுவர் நீதிமன்றமாக மாற்றியமைக்கப்பட்டது. மீதமுள்ள, 49 விரைவு நீதிமன்றங்களில், 38 விரைவு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மேலும், 10 விரைவு நீதிமன்றங்களை ஏற்கனவே மாவட்ட நீதிபதி பதவி தரத்தில் இயங்கும் மகளிர் நீதிமன்றங்கள் அமைந்துள்ள இடங்களில் தலா ஒன்று வீதம் அமைப்பதற்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இந்நீதிமன்றங்கள் கூடுதல் மகளிர் நீதிமன்றங்களென (Additional Mahila Courts) அழைக்கப்படுகின்றன. இந்த பத்து கூடுதல் மகளிர் நீதிமன்றங்களில் எட்டு நீதிமன்றங்கள் கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், பெரம்பலூர், கடலூர், செங்கல்பட்டு மற்றும் திருநெல்வேலி ஆகிய எட்டு இடங்களில் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

**ந) மோட்டார் வாகன விபத்து இழப்பீடு அசல் மனு மற்றும் நிலம் கையகப்படுத்துதல் தொடர்பான அசல் மனு ஆகிய வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றங்கள்**

மோட்டார் வாகன விபத்து இழப்பீடு அசல் மனு தொடர்பான வழக்குகளை விசாரணை செய்வதற்கு மாவட்ட நீதிபதி பதவி தரத்தில் எட்டு சிறப்பு நீதிமன்றங்களும், சார்பு நீதிபதி பதவி தரத்தில் பதினேழு சிறப்பு நீதிமன்றங்களும் மற்றும் நிலம் கையகப்படுத்துதல் தொடர்பான அசல் மனு வழக்குகளை விசாரணை செய்வதற்கென சார்பு நீதிபதி பதவி தரத்தில் நான்கு சிறப்பு நீதிமன்றங்களும் ஆக மொத்தம் 29 சிறப்பு நீதிமன்றங்கள் அமைப்பதற்கு ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டுள்ளது. இவற்றில் சார்பு நீதிபதி பதவி தரத்தில் மோட்டார் வாகன விபத்து இழப்பீடு அசல் மனு தொடர்பான வழக்குகளை விசாரணை செய்வதற்கு 16 சிறப்பு நிதீமன்றங்கள் ஏற்படுத்த அரசால் அறிவிக்கை செய்யப்பட்டு, 14 சிறப்பு நீதிமன்றங்கள் கோயம்புத்தூர், கடலூர், திண்டுக்கல், ஈரோடு, கிருஷ்ணகிரி, மதுரை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திருவண்ணாமலை ஆகிய இடங்களில் தலா ஒன்றும் மற்றும் சேலம், சென்னை ஆகிய இடங்களில் தலா இரண்டும் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மேலும் மோட்டார் வாகன விபத்து இழப்பீடு அசல் மனு வழக்குகளை

விசாரணை செய்ய மாவட்ட நீதிபதி பதவி தரத்தில் 6 சிறப்பு நீதிமன்றங்கள் சேலம், திருச்சிராப்பள்ளி, மதுரை, கிருஷ்ணகிரி, ஈரோடு மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மேலும், நிலம் கையகப்படுத்துதல் தொடர்பான வழக்குகளை விசாரிக்க ஒப்பளிப்பு செய்யப்பட்ட நான்கு சிறப்பு நீதிமன்றங்களில், வேலூர், அரக்கோணம், கடலூர் ஆகிய இடங்களில் தலா ஒன்று வீதம் 3 சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மேலும், முதுநிலை உரிமையியல் நீதிபதி பதவி தரத்தில் வேலூர் மாவட்டம் திருப்பத்தூரில் மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தீர்ப்பாயம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது. இவைகளுடன் தருமபுரியில் மாவட்ட நீதிபதி பதவி தரத்தில் ஒரு சிறப்பு நீதிமன்றமும், சார்பு நீதிபதி பதவி தரத்தில் ஒரு சிறப்பு நீதிமன்றமும், மோட்டார் வாகன விபத்து இழப்பீடு அசல் மனு வழக்குகளை விசாரணை செய்ய ஒப்பளிப்பு செய்து அறிவிக்கையும் செய்யப்பட்டு இவ்விரு நீதிமன்றங்களும் தற்பொழுது செயல்பட்டு வருகின்றன.

**ப) நில அபகரிப்பு தொடர்பான புகார்களை விசாரணை செய்வதற்கென சிறப்பு நீதிமன்றங்கள்**

நில அபகரிப்பு தொடர்பான புகார்களை விசாரணை செய்வதற்கு, மாநிலத்திலுள்ள அனைத்து நகரங்கள் மற்றும் மாவட்டங்களில் **36** நில அபகரிப்பிற்கு எதிராக சிறப்பு பிரிவுகளை காவல்துறையில் ஏற்படுத்த ஆணையிட்டதனைத் தொடர்ந்து, பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து ஏராளமான நில அபகரிப்பு புகார்கள் பதிவாயின. இதனைக் கருத்திற் கொண்டும், பொதுமக்களுக்கு விரைவாக நீதி கிடைக்கச் செய்யும் நோக்கத்தோடும், இவ்வழக்குகளை பிரத்யேகமாக விசாரிப்பதற்கென சிறப்பு நீதிமன்றங்கள் அமைப்பது அவசியமென கருதப்பட்டது. எனவே, சென்னையில் இரண்டு நீதிமன்றங்கள் உட்பட, மாநிலத்தில் உரிமையியல் நீதிபதி பதவி தரத்தில் **25** சிறப்பு நீதிமன்றங்களை ஏற்படுத்த ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதன் விவரம் பிற்சேர்க்கை**–4** ல் கொடுக்கப்பட்டுள்ளது. இந்நீதிமன்றங்களில், சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, விழுப்புரம், பெரம்பலூர், விருதுநகர், ஈரோடு, உதகமண்டலம், தருமபுரி, இராமநாதபுரம், தேனி, திருநெல்வேலி, தூத்துக்குடி, திருப்பூர், திருவள்ளூர், கிருஷ்ணகிரி, தஞ்சாவூர், நாமக்கல் ஆகிய

இடங்களில் தலா ஒன்றும், சென்னையில் இரண்டுமாக 21 நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### ம) கூடுதல் மாஸ்டர் நீதிமன்றங்கள் (Additional Master Courts)

இம்மாநிலத்தில் 10 கூடுதல் மாஸ்டர் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில், நான்கு சென்னை உயர்நீதிமன்றத்திலும், நான்கு சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றத்திலும் மற்றும் இரண்டு சென்னை சிறு வழக்குகள் நீதிமன்றத்திலும் உள்ளன. வழக்காடும் நபர்களை அழைப்பாணை மூலம் நீதிமன்றத்தில் முன்னிலை செய்யும் நடைமுறை மற்றும் வழக்கின் சாட்சியங்களை மட்டும் பதிவு செய்யவும் பணி நிறைவடையும் வரையில் விசாரணை செய்வதற்காக இந்நீதிமன்றங்கள் செயல்படுகின்றன.

### ய) அரசு தலைமை சொத்தாட்சியர் – பொறுப்பு சொத்தாட்சியர், சென்னை

சென்னையில் மாவட்ட நீதிபதி பதவி நிலையில், அரசு தலைமை சொத்தாட்சியர்–பொறுப்பு சொத்தாட்சியர் உள்ளார். இவருக்கு உதவியாக உரிமையியல் நீதிபதி பதவி நிலையில் துணைத் தலைமை சொத்தாட்சியர் – பொறுப்பு சொத்தாட்சியர் உள்ளார். இவ்விரு அதிகாரிகளும் அறக்கட்டளைகளின் சொத்துக்களுக்கும் மற்றும் உரிய வயதடையாதவர்கள் மற்றும்

காலஞ்சென்றவர்களின் சொத்துக்களுக்கும் பொறுப்பு வகிக்கின்றனர். இவர்கள் அரசு தலைமை சொத்தாட்சியர் மற்றும் பொறுப்புச் சொத்தாட்சியர் சட்டத்தின் விதிமுறைகளுக்கிணங்க, தங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றுகின்றனர்.

**11. நிலுவையிலுள்ள வழக்குகளின் விவரம்**

சென்னை உயர்நீதிமன்ற முதன்மை ஆயம், மதுரையிலுள்ள உயர்நீதிமன்றக் கிளை மற்றும் மாநிலத்திலுள்ள சார்நிலை நீதிமன்றங்களில் 2009–ம் ஆண்டு முதல் 2013–ம் ஆண்டு வரை தொடுக்கப்பட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகள், தீர்க்கப்பட்ட மற்றும் நிலுவையில் உள்ள வழக்குகள் குறித்த விவரம் முறையே பிற்சேர்க்கை–5, 6 மற்றும் 7–ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**12. தமிழ் வழியிலான சட்ட இதழ்**

சென்னை உயர்நீதிமன்றத்தால் வழங்கப்படுகின்ற சிறப்பான மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்புகளை வெளிக்கொணரும் வகையில், 'தீர்ப்பு திரட்டு' என்ற பெயரில் தமிழ் வழியிலான சட்ட இதழ் வழக்கறிஞர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக மாதமிருமுறை வெளியிடப்பட்டு வருகிறது.

## 13. மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டம்

**13.1** மத்திய அரசின் நீதித்துறையானது நீதிமன்றங்களின் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு, நீதிமன்றங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான ''மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டம்'' என்ற திட்டத்தினை மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு நிதி உதவி அளித்து செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் சார்நிலை நீதிமன்றங்களுக்கான கட்டடங்கள் மற்றும் நீதிபதிகள் மற்றும் நீதித்துறை அலுவலர்களுக்கான குடியிருப்புகளை கட்டுவதன் மூலம் நீதி வழங்குதலை மேம்படுத்த உதவுகிறது. இத்திட்டத்தின் கீழ் மத்திய மற்றும் மாநில அரசுகளின் பங்கு 2012–13 ஆம் ஆண்டு முதல் 75:25 என்ற விகிதத்தில் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

13.2 இத்திட்டத்தின் கீழ் 2006–07 முதல் 2012–13 ஆம் ஆண்டு வரை மத்திய மற்றும் மாநில அரசால் ஒப்பளிக்கப்பட்ட தொகையின் விவரம் கீழ்வருமாறு:–

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | ஆண்டு | மத்திய அரசின் பங்கு | மாநில அரசின் பங்கு | ஒப்பளிக்கப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 1. | 2006–07 | 245.00 | 251.420 | 496.420 |
| 2. | 2007–08 | 248.00 | 250.852 | 498.852 |
| 3. | 2008–09 | 846.00 | 761.210 | 1607.210 |
| 4. | 2009–10 | 356.00 | 286.560 | 642.260 |
| 5. | 2010–11 | ––– | ––– | ––– |
| 6. | 2011–12 | ––– | ––– | ––– |
| 7. | 2012–13 | 1953.00 | 631.090 | 2584.090 |
| | **மொத்தம்** | **3648.00** | **2180.832** | **5828.832** |

13.3 இத்திட்டத்தின் கீழ் மத்திய அரசின் பங்கானது 2010–11 ஆம் ஆண்டிற்கு ரூ.3.37 கோடியும் மற்றும் 2011–12 ஆம் ஆண்டிற்கு ரூ.14.97 கோடியென உத்தேச ஒதுக்கீடாக அறிவிக்கப்பட்டது. எனினும், மேற்காணும் ஆண்டுகளுக்கான மத்திய அரசின் பங்கானது இதுவரை விடுவிக்கப்படவில்லை. 2012–13ஆம் ஆண்டிற்கு ரூ.1953 இலட்சத்தினை மத்திய அரசு இத்திட்டத்தின் கீழ் தனது பங்காக விடுவித்தது. இம்மாநில அரசும் தனது பங்காக ரூ.631.09 இலட்சத்தினை ஒதுக்கீடு செய்து மொத்தம் ரூ.2584.09 இலட்சம் செலவில் நாகப்பட்டினம் மாவட்டம் மயிலாடுதுறை, கடலூர் மாவட்டம் திட்டக்குடி, இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் ஆகிய இடங்களில்

ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்கும், கிருஷ்ணகிரியில் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்கும் ஒப்பளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் 2013–14 ஆம் ஆண்டிற்கு ரூ.7343.00 இலட்சத்தினை தனது பங்காக மத்திய அரசு இத்திட்டத்தின் கீழ் விடுவித்திருக்கிறது.

## 14. பதிமூன்றாவது நிதிக்குழுவின் பரிந்துரை அடிப்படையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

14.1 நீதி வழங்குதலை மேம்படுத்தும் பொருட்டு 13–வது நிதிக்குழு 5 ஆண்டுகளுக்கு (2010–15 வரை) தமிழ் நாட்டிற்கு ரூ.252.44 கோடி வழங்க பரிந்துரைத்துள்ளது. இந்திய அரசு இந்நிதியை பயன்படுத்துவதற்கு கீழ்காணும் வகைகளில் வழிகாட்டுதலை பிறப்பித்துள்ளது. 2010–11 முதல் 2014–15 வரையிலான ஐந்தாண்டுகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி விவரம் பின்வருமாறு:

| வ. எண் | திட்டத்தின் பெயர் | தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1. | காலை மற்றும் மாலை நேர நீதிமன்றங்கள் | 123.54 |
| 2. | மக்கள் நீதிமன்றங்கள் மற்றும் சட்ட உதவி | 14.83 |

| | | |
|---|---|---|
| 3. | நீதித்துறை அதிகாரிகளுக்கான பயிற்சி | 12.35 |
| 4. | அரசு குற்ற வழக்கு நடத்துனர்களுக்கான பயிற்சி | 7.41 |
| 5. | புராதன நீதிமன்றக் கட்டடங்கள் | 22.24 |
| 6. | நீதித்துறை பயிற்சிக் கழகம் | 15.00 |
| 7. | மாற்றுத் தீர்வு மையங்கள் | 40.76 |
| 8. | நீதிமன்ற மேலாளர்கள் | 16.30 |
| | **மொத்தம்** | **252.44** |

14.2 மத்திய அரசு வெளியிட்ட வழிகாட்டுதல்களின்படி, தலைமைச் செயலாளரை தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள உயர்மட்ட கண்காணிப்புக் குழு 13–வது நிதிக்குழுவின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிப்பதுடன் அத்திட்டங்கள் செயல்படுத்தப்படுவதையும் கண்காணிக்கிறது. இதுவரை இக்கண்காணிப்பு குழு ரூ.206.25 கோடிக்கு ஒப்புதல் அளித்துள்ளது. மத்திய அரசு இத்திட்டத்திற்காக இதுவரை ரூ. 74.52 கோடி விடுவித்துள்ளது.

**14.3 பதிமூன்றாவது நிதிக்குழு பரிந்துரை அடிப்படையில் ஒப்பளிக்கப்பட்டுள்ள திட்டங்களின் விவரங்கள்**

- மோட்டார் வாகன விபத்து இழப்பீடு அசல் மனு / நிலம் கையகப்படுத்துதல் தொடர்பான அசல் மனு

வழக்குகளை விசாரிக்க ரூ.49.21 கோடி செலவில் மாவட்ட நீதிபதி / சார்பு நீதிபதி பதவி தரத்தில் 29 சிறப்பு நீதிமன்றங்கள் அமைப்பதற்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- மாவட்ட நீதிபதி / சார்பு நீதிபதி / குற்றவியல் நடுவர் ஆகிய பதவி தரத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மூன்று நீதிமன்றங்கள் வீதம் 30 மாவட்டத்திற்கு 90 மாலை நேர நீதிமன்றங்கள் ரூ.3.92 கோடி செலவில் அமைப்பதற்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில் முதுநிலை உரிமையியல் நீதிபதி பதவி தரத்தில் மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தீர்ப்பாயம் ரூ.1.53 கோடி செலவில் அமைப்பதற்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- கோயம்புத்தூரில் மாவட்ட நீதிபதி பதவி தரத்தில் கூடுதல் குடும்ப நல நீதிமன்றம் ரூ.1.36 கோடி செலவில் அமைப்பதற்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- சென்னையில் செயல்படும் நான்கு விடுமுறை கால குடும்ப நல நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் அலுவலர்களுக்கு மதிப்பூதியம் வழங்க ரூ.25.71 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- மாநில நீதித்துறை பயிற்சிக் கழகத்தின் மண்டல மையங்களை, கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் ரூ.17.00 கோடி செலவில் கட்டுவதற்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- நீதித்துறை அதிகாரிகளுக்கு பயிற்சி அளிப்பதற்காக, தமிழ்நாடு மாநில நீதித்துறை பயிற்சிக் கழகத்திற்கு ஆண்டொன்றிற்கு ரூ.2.47 கோடி வீதம் 2011–12, 2012–13 மற்றும் 2013–14 ம் ஆண்டுகளுக்கு ரூ.7.41 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- நீதிமன்ற மேலாண்மையில் பணிகளை திறம்பட செயல்படுத்த, உதவிப் பதிவாளர் பதவி தரத்தில் 35 நீதிமன்ற மேலாளர் பணியிடங்களை ஏற்படுத்த ரூ.7.68 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில், மாற்றுத் தீர்வு மையக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.4.20 கோடியும் மற்றும் 29 மாவட்டங்களில் மாற்றுத் தீர்வு மையக் கட்டடங்கள் கட்டுவதற்கு மாவட்டத்திற்கு ஒரு கோடி வீதம் ரூ.29.00 கோடியும் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- சட்ட அறிவு விளக்க முகாம்கள், மக்கள் நீதிமன்றங்கள் மற்றும் மாபெரும் மக்கள் நீதிமன்றங்கள் ஆகியவற்றை நடத்துவதற்கு 2011–12, 2012–13 மற்றும் 2013– 14 ஆகிய ஆண்டுகளுக்கு ரூ.8.89 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- சமரசம் செய்பவர்கள், நீதித்துறை அலுவலர்கள் மற்றும் சமரசம் செய்யும் வழக்கறிஞர்கள் ஆகியோர்களுக்கு பயிற்சி அளிக்க 2012–2013 ஆண்டுக்கென ரூ.2.79 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- 2013–14 ஆண்டுக்கென சமரசம் செய்வோர், நீதித்துறை அலுவலர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் ஆகியோருக்கு பயிற்சி அளிக்க ரூ.2.65 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- 645 அரசு குற்ற வழக்கு நடத்துனர்களுக்கு அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையத்தின் மூலம் 2011–12 முதல் 2012–13 வரை பணியிடைப்பயிற்சி அளிக்க ரூ.78.87 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- மாநிலத்திலுள்ள அனைத்து குற்ற வழக்கு நடத்துனர்களுக்கு, 71 சட்டங்களை உள்ளடக்கிய

கைபேசியில் பயன்படுத்தும் மென்பொருள் வழங்க ரூ.4.83 இலட்சம் 2011–12 ல் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- குற்ற வழக்குத்தொடர்வு இயக்ககத்தின் வழக்கு நடத்துனர்களின் பயன்பாட்டிற்காக சட்டப் புத்தகங்கள் வாங்குவதற்கு 2011–12 ஆம் ஆண்டிற்கு ரூ.8.95 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- அரசு குற்ற வழக்கு நடத்துனர்களுக்கு சட்ட புத்தகங்கள் வழங்குவதற்கு 2012–13 ஆண்டுக்கென ரூ.84,25,300 ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- அரசு குற்ற வழக்கு நடத்துனர்களுக்கு மடிக்கணினிகள், அச்சுப்பொறிகள், கணினி பயிற்சி மற்றும் உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற தீர்ப்புகளை இணையம் மூலம் பெறவும் மேலும் சட்ட புத்தகங்கள் வழங்கவும் 2012–13, 2013–14 மற்றும் 2014–15 ஆண்டுகளில் ரூ.5,10,78,097/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- திண்டுக்கல், ஈரோடு, திருநெல்வேலி, சிவகங்கை, திருவள்ளூர், செங்கல்பட்டு, விழுப்புரம், வேலூர், திருச்சிராப்பள்ளி, தருமபுரி, திருவாரூர், விருதுநகர் மற்றும் நீலகிரி ஆகிய இடங்களில் தலா ஒன்று வீதம்

13 குடும்பநல நீதிமன்றங்கள் ரூ.8.06 கோடி செலவில் அமைப்பதற்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- மாநிலத்தில் பெரம்பலூர் மாவட்டம் நீங்கலாக மாவட்டத்திற்கு ஒரு நீதிமன்றமென 31 மாலை நேர நீதிமன்றங்கள் ரூ.1.34 கோடி செலவில் அமைப்பதற்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- மோட்டார் வாகன விபத்து இழப்பீடு அசல்மனு தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கு தருமபுரி மாவட்டம், தருமபுரியில் மாவட்ட நீதிபதி பதவி தரத்தில் ஒரு சிறப்பு நீதிமன்றமும், சார்பு நீதிபதி பதவி தரத்தில் ஒரு சிறப்பு நீதிமன்றமும் ரூ.1.08 கோடி செலவில் அமைப்பதற்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- 2012–13 மற்றும் 2013–14ஆம் ஆண்டுகளில் சென்னையிலுள்ள விடுமுறை கால குடும்பநல நீதிமன்ற நீதித்துறை அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்கு மதிப்பூதியம் வழங்குவதற்காக ரூ.28.85 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- குடிமை உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1955 மற்றும் பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர்

(வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம், **1989**ன் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிப்பதற்கு விழுப்புரம் மற்றும் சிவகங்கையில் தலா ஒன்று வீதம் மாவட்ட நீதிபதி பதவி தரத்தில் இரண்டு சிறப்பு நீதிமன்றங்கள் அமைப்பதற்கு ரூ.**1.10** கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு மாநில நீதித்துறை பயிற்சி கழகத்திற்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் மானியமான ரூ.**15.00** இலட்சம், **2013–14**ம் ஆண்டிற்கு மட்டும் ரூ.**40.00** இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.
- சென்னையிலுள்ள பாரம்பரிய நீதிமன்றக் கட்டடங்களின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு பணிக்கென ரூ.**22.21** கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.
- **35** நீதிமன்ற மேலாளர்களுக்கு உதவிபுரிய நியமிக்கப்பட்ட **35** தட்டச்சர்கள் மற்றும் **35** அலுவலக உதவியாளர்களுக்கு மாதந்தோறும் முறையே ரூ.**12,000/–** மற்றும் ரூ.**8,000/–** தொகுப்பூதியம் வழங்குவதற்கு ரூ.**35** இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- ரூ.34 இலட்சம் தொடர்செலவினத்தில் திருப்பூரில் கூடுதல் சார்பு நீதிமன்றம் அமைக்க ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

## 15. நீதிமன்ற மேலாளர்கள்

### நீதிமன்ற மேலாளர்களுக்கு உதவிப் பணியாளர்கள்

15.1 சென்னை உயர்நீதிமன்றம், சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை மற்றும் மாவட்ட நீதிமன்றங்களுக்கு 35 நீதிமன்ற மேலாளர் பதவிகள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. நீதிமன்ற மேலாளர்களுக்கு உதவியாக பணியாளர்களை நியமித்துக் கொள்ள 13–வது நிதிக்குழுவின் மானியத்தின் ஒரு பகுதியை ஒரு நீதிமன்ற மேலாளருக்கான சராசரி செலவினம் மாதம் ரூ.20,000/–க்கு மிகாமல் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையுடன் மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. அதன்படி, 35 நீதிமன்ற மேலாளர்களுக்கு தலா ஒரு தட்டச்சர் மற்றும் ஒரு அலுவலக உதவியாளருக்கு தொகுப்பூதியமாக மாதந்தோறும் முறையே ரூ.12,000/– மற்றும் ரூ.8,000/– வீதம் வழங்க 13வது நிதிக்குழுவின் பரிந்துரையின்படி "நீதிமன்ற மேலாளர்கள்" என்ற திட்டத்தின் கீழ் நவம்பர், 2013 முதல் மார்ச் 2015 வரை ரூ.1.19 கோடி ஒப்பளிக்கப்பட்டது. அத்தொகையிலிருந்து

2013–14 ஆம் நிதியாண்டிற்கு ரூ.35,00,000/– வழங்கப்பட்டுள்ளது.

**நீதிமன்ற மேலாளர்களுக்கு மடிக்கணினி**

**15.2** நீதிமன்றங்களின் நிருவாக கடமையினை செவ்வனே ஆற்றவும், நீதித்துறை பணிகளில் முழுக்கவனத்துடன் அதிக நேரத்தை அர்ப்பணித்து செயல்படவும் நீதிபதிகளுக்கு உதவி புரிந்திட உதவி பதிவாளர் தரத்தில் 35 நீதிமன்ற மேலாளர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. அனைத்து மாவட்ட நீதிமன்றங்களில் புள்ளி விவரங்கள் சேகரித்தல், சேகரித்த விவரங்களை ஆராய்ந்து அறிதல், அதனை சம்பந்தப்பட்ட மாவட்ட நீதிபதிகள் முன்வைத்து அதனை உயர்நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்தல் போன்ற பல பணிகளை மேற்கொள்வது நீதிமன்ற மேலாளரின் பங்காகும். எனவே, 35 நீதிமன்ற மேலாளர்களின் உபயோகத்திற்காக 10 GB-யுடன் கூடிய தகவல் அட்டைகள் கொண்ட 35 மடிக்கணினிகள் இரண்டு வருட திட்டத்தின்படி வழங்குவதற்கு ரூ.24,07,775/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

## 16. நீதித்துறை அமைப்புகளை கணினிமயமாக்கல்

**16.1** மத்திய அரசின் சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சகம் தேசிய தகவல் மையத்துடன் இணைந்து 2005–ஆம் ஆண்டில் நாடு முழுவதும் உள்ள மாவட்ட மற்றும் சார்நிலை நீதிமன்றங்களை கணினிமயமாக்கும் பொருட்டு ஒரு திட்டத்தை அறிவித்தது. இத்திட்டத்திற்காக தேசிய தகவல் மையம், புதுதில்லி, ரூ.4.18 கோடியை மூன்று தவணைகளில் வழங்கியது. கணினி சர்வர் அறை மற்றும் நீதித்துறை சேவை மையம் ஆகியவைகளை அமைப்பதற்குரிய இடம் தேர்வு செய்யப்பட்டு தேசிய தகவல் மையத்தால் வழங்கப்பட்ட கணினிகள், சர்வர், UPS, அச்சுப்பொறிகள் மற்றும் அதன் உபபொருட்கள் அனைத்தும் மாவட்டத் தலைமையிடங்களில் நிறுவப்பட்டன. தகவல் தொழில் நுட்பம் (ம) தொலைத் தொடர்புகளை மாவட்ட, தாலுக்கா நீதிமன்றங்கள் மற்றும் கீழ்நிலை நீதிமன்றங்களில் செயல்படுத்துவதே கணினிமயமாக்கலின் முக்கிய குறிக்கோளாகும். இத்திட்டம், கணினி வன்பொருள், மென்பொருள் மற்றும் வலைதளங்களை அமைத்து மாவட்ட மற்றும் தாலுக்கா நீதிமன்றங்களில் அன்றாடம் நடைபெறும் பணிகளை சிறப்பாக செயல்படுத்த உதவுகிறது. முக்கிய பணிகளான வழக்கு தொடுத்தல்,

ஒதுக்கீடு, பதிவு, அவற்றின் நிலை, ஆணைகள் மற்றும் தீர்ப்புகள் போன்றவைகளை இதன் மூலமாக பெறலாம். விசாரணைக்காக பட்டியலிடப்படும் வழக்குகள், வழக்குகளின் தற்போதைய நிலை, ஆணைகள் மற்றும் தீர்ப்புகள் ஆகியவற்றை வழக்காடும் பொதுமக்கள், வழக்கறிஞர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் நீதிமன்ற வலைத்தளத்தில் பெறமுடியும். இத்திட்டத்தின் நோக்கமானது **24** மணிநேரமும் வழக்கு தொடர்பான நம்பத்தகுந்த தகவல்களை பெறுவதற்கு ஒரு தேசிய அளவிலான இணையதளம் அமைப்பதாகும்.

**16.2** இத்திட்டம், மடிக்கணினிகள், லேசர் அச்சுப்பொறிகள், நீதிபதிகள் மற்றும் நீதிமன்ற அலுவலர்களுக்கான பயிற்சி, நீதிபதிகளுக்கான இணையத்தள வசதிகள், நீதிமன்ற வளாகங்களுக்கான இணையதள இணைப்புகள், காணொளி கலந்துரையாடல் வசதி, இடம் தேர்வு, வன்பொருள், இணைய கட்டமைப்பு மற்றும் மென்பொருள் பயன்பாடு, தொழில்நுட்ப மனிதவளம், தகவல் தொழில் நுட்ப மற்றும் தொலை தொடர்புகளை தரம் உயர்த்துதல் ஆகிய முக்கிய அம்சங்களை கொண்டதாகும். தேசிய தகவல் மையம் (NIC), இத்திட்டத்தை செயல்படுத்தும் ஒரு முகமையாக உள்ளது. மாவட்ட நீதிபதியின் தலைமையின் கீழ், மாவட்டம்

முழுவதும் தாலுக்கா நீதிமன்றம் உட்பட இத்திட்டத்தின் செயல்பாட்டினை கண்காணிக்க “மாவட்ட வளர்ச்சி கண்காணிப்பு குழு” வில் தேசிய தகவல் மையத்தின் பணியாளர்கள் மாவட்ட அளவில் கண்காணித்து வருகிறார்கள். உயர்நீதிமன்றம் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதை நிர்வகிக்க தொழில்நுட்ப பணியாளர்களை நியமித்துள்ளது. இத்திட்டத்தின் குறிக்கோள்கள்–

1. நீதிமன்றங்களில் தினந்தோறும் நடைபெறும் நீதிமன்ற நிருவாகத்தினை சிறப்பாக செயல்படுத்த உதவுதல்.
2. நிலுவையிலுள்ள வழக்குகளை குறைக்க நீதிமன்ற நிருவாகத்திற்கு உதவுதல்
3. வழக்கு தொடுப்பவர்களுக்கு வெளிப்படையான தகவல்களை அளித்தல்
4. நீதிபதிகளுக்கு சட்டம் மற்றும் நீதித்துறை சார்ந்த தகவல்களை பெற வழி ஏற்படுத்துதல்.

**உயர்நீதிமன்றத்தில் கணினிமயமாக்கல் (சென்னை மற்றும் மதுரை கிளை)**

**16.3** அனைத்து நீதிபதிகளுக்கும் மடிக்கணினிகள், கணிப்பொறிகள், அச்சுப்பொறிகள் மற்றும் அகன்ற வலைதள இணைப்பு ஆகியவற்றை அவர்களின் இல்ல அலுவலகங்கள் மற்றும் நீதிமன்ற அலுவலகங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற வழக்குகளின் தற்போதைய நிலை, ஆணைகள் மற்றும் தீர்ப்புகள் பற்றிய தகவல்களை வழக்கு தொடுப்பவர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் ஆகியோர் பெறுவதற்கு உயர்நீதிமன்ற வலைதளம் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

16.4 வழக்குகளின் தகவல் குறிப்புகளை கண்காணிக்கவும் மற்றும் தேவையான மென் பொருள்களை உருவாக்கவும் தேசிய தகவல் மையத்தின் கிளை (NIC) உயர்நீதிமன்ற வளாகத்தில் உள்ளது. கணினி மூலம் தினந்தோறும் வழக்குப் பட்டியல் தயாரிக்கப்பட்டு இணைய தளத்தில் வெளியிடப்பட்டு வருகிறது. மேலும், சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மதுரை கிளையில் வழக்கு தொடுப்பவர்களும், வழக்கறிஞர்களும் நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்குகளின் நிலை பற்றி தெரிந்துகொள்ள மின்னணு பலகை வைக்கப்பட்டுள்ளது. இம்மின்னணு பலகைகளை புதியதாக தற்போதைய தொழில் நுட்பத்திற்கு தகுந்தவாறு மாற்றுவதற்கு அரசு ரூ.1.88 கோடி ஒப்பளித்துள்ளது.

**சார் நிலை நீதிமன்றங்களில் கணினிமயமாக்கல்**

16.5 அனைத்து நீதித்துறை அலுவலர்களுக்கும் மடிக்கணினிகள், லேசர் அச்சுப்பொறிகள் மற்றும் அகன்ற வலைத்தள இணைப்பு வழங்கப்பட்டுள்ளன. 42 மாவட்ட

நீதிமன்ற வளாகங்களுக்கு லீஸ்டு லைன் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது மற்றும் அனைத்து நீதித்துறை அலுவலர்களுக்கும் தனியான அடையாள எண் கொடுக்கப்பட்டுள்ளது. அனைத்து மாவட்டங்களுக்கும் கணிப்பொறி தொழில்நுட்ப பணிக்கென ஒரு கணிப்பொறி அலுவலர் மற்றும் இரு கணிப்பொறி உதவியாளர்கள் வழங்கப்பட்டுள்ளனர். கணினி வன்பொருள் அனைத்து நீதிமன்றங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

**17. உரிமையியல் நீதிபதிகள் நியமனம்**

17.1 தமிழ்நாடு மாநில நீதித்துறை பணியில் உரிமையியல் நீதிபதி பதவியிடங்களில் 2009–2012 ஆண்டுகளில் ஏற்பட்ட அதிகமான காலிப் பணியிடங்களில் நேரடி நியமனம் மூலம் 177 நபர்கள் உரிமையியல் நீதிபதிகளாக பணியமர்த்தப்பட்டனர்.

17.2 உரிமையியல் நீதிபதி பதவிக்கான காலிப்பணியிடம் 2013–14 ஆம் ஆண்டிற்கு 162 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது. இப்பதவிகளை நிரப்புவதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**18. நீதித்துறை பயிற்சிக் கழகம்**

18.1 தமிழ்நாடு மாநில நீதித்துறை பயிற்சிக் கழகம் 23.04.2001 அன்று நிறுவப்பட்டது. நீதித்துறைப் பயிற்சிக் கழக

கட்டடமானது ரூ.4.50 கோடி செலவில் கட்டப்பட்டு, 25.07.2004 அன்று திறந்து வைக்கப்பட்டது. இப்பயிற்சிக்கழகமானது, சென்னை உயர்நீதிமன்ற நிருவாகத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது. இப்பயிற்சிக்கழகத்தின் நோக்கமானது மாவட்ட நீதிபதிகள், முதுநிலை உரிமையியல் நீதிபதிகள், உரிமையியல் நீதிபதிகள், நீதித்துறைப் பணியாளர்கள் மற்றும் புதியதாக பணி நியமனம் செய்யப்படும் நீதிபதிகள் போன்ற நீதித்துறை அலுவலர்களுக்கு வளர்ந்து வரும் சட்டம், சமூகம் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப பணித்திறனை வளர்த்துக் கொள்ள ஏதுவாக பயிற்சி வழங்குவது ஆகும்.

**18.2** நீதித்துறை பயிற்சிக் கழகத்திற்கு 2006 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் ரூ. 15.00 இலட்சம் மானியமாக அரசு வழங்கி வருகின்றது. 13–வது நிதிக்குழுவால், காலை/ மாலை நேர நீதிமன்றங்களுக்கு வழங்கப்பட்ட நிதியினை பயன்படுத்தி 2013–14 ஆம் ஆண்டிற்கு மட்டும் இம்மானியம் ரூ.15.00 இலட்சத்திலிருந்து ரூ.40.00 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

**18.3** நீதித்துறை அலுவலர்களுக்கு ஆண்டு முழுவதும் பயிற்சிகள் திறம்பட வழங்கி வருவதால், இப்பயிற்சிக் கழகத்தினை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு மாநில நீதித்துறை

பயிற்சிக் கழகத்தின் மண்டல மையங்களை கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் கட்டுவதற்கு தலா ரூ.8.50 கோடி வீதம் ரூ.17.00 கோடி வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது. மேற்படி செலவினை 13–வது நிதிக் குழுவினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.15.00 கோடி தொகையினை பயன்படுத்தியது போக மீதமுள்ள தொகை ரூ.2.00 கோடி மாநில நிதியிலிருந்து வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. மதுரையில் மாநில நீதித்துறை பயிற்சிக் கழக மண்டல மையத்தினை கட்டுவதற்கு ஒப்பளிக்கப்பட்ட தொகை ரூ.8.50 கோடி தவிர கூடுதலாக ரூ.1.11 கோடி வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது. இவ்விடங்களில் கட்டுமானப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

18.4 நீதித்துறை அதிகாரிகளுக்கு பயிற்சி அளிப்பதற்காக, தமிழ்நாடு மாநில நீதித்துறை பயிற்சிக் கழகத்திற்கு, 2011–12, 2012–13 மற்றும் 2013–14 ஆம் ஆண்டுகளுக்கு 13–வது நிதிக்குழுவின் கீழ் ரூ.7.41 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

### 19. உயர்நீதிமன்ற நடவடிக்கைகளில் தமிழ்மொழியை பயன்படுத்துதல்

இந்தியாவில் நான்கு மாநிலங்களின் உயர்நீதிமன்றங்களில் அந்தந்த மாநில மொழியே பயன்பாட்டில்

உள்ளது. ஆனால், சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழ்மொழியை அலுவல் மொழியாக பயன்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை 11.10.2012 அன்று நடந்த உச்சநீதிமன்ற முழு நீதிமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. எனினும், இது இம்மாநிலத்தின் நீண்ட நாள் கோரிக்கை மற்றும் விருப்பமாக இருப்பதால், இக்கோரிக்கையை மறுபரிசீலனை செய்யுமாறு மத்திய அரசை இவ்வரசு மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகிறது.

**20. தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதி**

இறந்த வழக்குரைஞர்களின் வாரிசுதாரர்களுக்கு / நியமனதாரர்களுக்கு தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதியிலிருந்து வழங்கப்படும் நிதி உதவி ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.5.25 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு வழக்கறிஞர்களின் நலநிதியினை தொடர்ந்து செயல்படுத்தும் வகையில் 2013–14 நிதியாண்டில், அரசின் மானியமாக ரூ.4 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**21. தமிழ்நாடு வழக்குரைஞர்களின் எழுத்தர்கள் நல நிதி**

இறந்த வழக்குரைஞர்களின் எழுத்தர்களுடைய நியமனதாரர்கள் / அவரை சார்ந்தவர்களுக்கு தமிழ்நாடு வழக்குரைஞர்களின் எழுத்தர்கள் நலநிதியிலிருந்து

வழங்கப்படும் நிதி உதவியினை உயர்த்துமாறு அரசிடம் கோரிக்கை வைத்து வழக்குரைஞர்கள் குழுமத்தால் தீர்மானம் இயற்றப்பட்டது. வழக்குரைஞர்களின் எழுத்தர்களுடைய நலன் கருதி இறந்த வழக்குரைஞர்களின் எழுத்தர்களின் நியமனதாரர்களுக்கு / அவரை சார்ந்தவர்களுக்கு, தமிழ்நாடு வழக்குரைஞர்கள் எழுத்தர்கள் நல நிதியிலிருந்து வழங்கப்படும் நிதி உதவி ரூ.50,000/–லிருந்து ரூ.2 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

**22. மாண்புமிகு நீதிபதிகளுக்கு வாகன வசதி அளித்தல்**

சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிக்கு 1 டோயோட்டோ ஆல்டிஸ் மகிழுந்தும், மாவட்ட நீதிபதிகள் தரத்திலுள்ள நீதிபதிகளுக்கு குளிர்சாதன வசதியுடன் கூடிய 134 மகிழுந்துகளும், உயர்நீதிமன்ற பதிவாளர்களுக்கு 5 ஹோண்டா சிட்டி மகிழுந்துகளும், ஈரோடு மாவட்ட தலைமை குற்றவியல் நீதிபதிக்கு 1 அம்பாசிடர் மகிழுந்தும், உயர்நீதிமன்ற மரபு அலுவல் பயன்பாட்டிற்காக 11 நிசான் இவாலியா மகிழுந்துகளும் மற்றும் உயர் நீதிமன்ற இணைப்பதிவாளர்களுக்கு 2 அம்பாசிடர் மகிழுந்துகளும், சென்னை பெருநகர தலைமை குற்றவியல் நடுவருக்கு மாருதி SX4 வாகனம் ஆகியன வாங்குவதற்கு ரூ.12.35 கோடியினை அரசு ஒப்பளித்து ஆணையிட்டுள்ளது.

### 23. நீதிமன்றக் கட்டடங்கள், நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் மற்றும் இதர உள்கட்டமைப்பு வசதிகள்

நீதிமன்றங்களுக்கு புதிய கட்டடங்கள், நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் உட்பட நீதித்துறையின் உள்கட்டமைப்பு வசதிகளின் மேம்பாட்டுக்கு 2011–2012 முதல் 2013–2014 வரை ரூ.230.56 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. 2013–14–ம் ஆண்டில் நீதிமன்றக் கட்டடங்கள், நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் மற்றும் நீதிமன்றங்களுக்கான இதர உள்கட்டமைப்பு வசதிகள் செய்ய நிதி ஒப்பளிக்கப்பட்ட திட்டங்களின் விவரம் பின்வருமாறு:-

- தேனி மாவட்டம், பெரியகுளத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்கு ரூ.653.76 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- திருப்பூர் மாவட்டம், தாராபுரத்தில் உள்ள குற்றவியல் நீதிமன்ற நீதிபதியின் குடியிருப்புக்கு சுற்றுச்சுவர் கட்டுவதற்கு ரூ.2.31 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- மதுரை மாவட்டம், திருமங்கலம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திற்கு சுற்றுச்சுவர் கட்டுவதற்கு ரூ.7.80 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வளாகத்தில் மாண்புமிகு தலைமை நீதிபதி தங்குவதற்கான மாளிகை மற்றும் மாண்புமிகு நீதிபதிகள் தங்குவதற்காக ஐந்து மாளிகைகள் கட்டுவதற்கு ரூ.488.50 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் இணைப்புக் கட்டடத்தின் பின்புறம் கூடுதல் அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.388.20 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- சிவகங்கை மாவட்டம், இளையான்குடியில் நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிக்கான குடியிருப்புகள் கட்டுவதற்கு ரூ.206.51 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் காவல் கட்டுப்பாட்டு அறை, தளவாடங்கள் வைப்பறை மற்றும் காவலர்கள் ஓய்வு அறை கட்டுவதற்கு ரூ.72.20 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வளாகத்தில் காவல் கட்டுப்பாட்டு அறை, தளவாடங்கள் வைப்பறை மற்றும் காவலர்கள் ஓய்வு அறை கட்டுவதற்கு ரூ.150 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரத்திலுள்ள முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிபதிக்கான குடியிருப்புக்கு சுற்றுச்சுவர் கட்டுவதற்கு ரூ.**1.67** இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்கு ரூ.**1550.47** இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- சென்னையிலுள்ள ஐந்து புராதன நீதிமன்றக் கட்டடங்களை பாதுகாக்கவும் மற்றும் பராமரிப்பதற்கும் ரூ.**22.21** கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரத்தில் உள்ள ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடத்தில் மின் தூக்கி வசதி அளிப்பதற்கு ரூ.**41.41** இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில், மேற்கு மற்றும் தெற்கு பகுதியில் அமைந்துள்ள இணைப்பு கட்டடத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள நேர்முக உதவியாளர் பிரிவு /

நகல் எடுக்கும் பிரிவிற்கு கூடுதல் வசதிகள் செய்வதற்கு ரூ.1.30 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- விழுப்புரம் மாவட்டம் செஞ்சியில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்கு ரூ.9.30 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- சார்நிலை நீதிமன்றக் கட்டடங்களில் சிறப்பு பராமரிப்பு பணிகள் (கட்டுமானம் மற்றும் மின்சாரம்) செய்வதற்கான நிதியை 2013–2014 ஆண்டிற்கு ரூ.6.17 கோடியிலிருந்து ரூ.10.00 கோடியாகவும், 2014–2015 ஆண்டிற்கு ரூ.15.00 கோடியாகவும் உயர்த்தி வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**24. 2011–2012, 2012–2013 மற்றும் 2013–2014–ம் ஆண்டுகளில் புதிய நீதிமன்றங்கள்**

இந்த அரசு, 2011–2012, 2012–2013 2013–2014–ம் ஆண்டுகளில் மட்டும் மொத்தம் 158 புதிய நீதிமன்றங்கள் ஏற்படுத்த ஒப்பளிப்பு செய்துள்ளது:–

**சிறப்பு நீதிமன்றங்கள்**

- நில அபகரிப்பு வழக்குகளுக்கான சிறப்பு – 25 நீதிமன்றங்கள்

- மோட்டார் வாகன விபத்து இழப்பீடு அசல் மனு வழக்குகளை விசாரிப்பதற்காக சேலம், திருச்சிராப்பள்ளி, திருவள்ளூர், மதுரை, விழுப்புரம், கிருஷ்ணகிரி, ஈரோடு மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் மாவட்ட நீதிபதி பதவி தரத்தில் சிறப்பு நீதிமன்றங்கள் – 08
- மோட்டார் வாகன விபத்து இழப்பீடு அசல் மனு வழக்குகளை விசாரிப்பதற்காக சென்னை, விழுப்புரம் மற்றும் சேலம் ஆகிய இடங்களில் தலா இரண்டு, கோயம்புத்தூர், கடலூர், திண்டுக்கல், ஈரோடு, திருநெல்வேலி, திருவண்ணாமலை, திருச்சிராப்பள்ளி, திருவள்ளூர், மதுரை, கிருஷ்ணகிரி மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் தலா ஒன்று வீதம் சார்பு நீதிபதி பதவி தரத்தில் சிறப்பு நீதிமன்றங்கள் – 17
- நில எடுப்பு அசல் மனு வழக்குகளை விசாரிப்பதற்காக வேலூர், அரக்கோணம், திருவள்ளூர் மற்றும் கடலூர் ஆகிய இடங்களில் சார்பு நீதிபதி பதவி தரத்தில் சிறப்பு நீதிமன்றங்கள் – 04

- மத்திய குற்றப் பிரிவு (CCB) (மோசடி வழக்குகள்) மற்றும் குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வு (CBCID) துறையின் சென்னை மாநகர வழக்குகளை விசாரணை செய்ய சென்னையில் சிறப்பு நீதிமன்றம் – 01
- ஊழல் தடுப்புச் சட்டத்தின்கீழ் தொடரப்படும் வழக்குகளை விசாரிப்பதற்கென விழுப்புரம், சேலம், சிவகங்கை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் தனி நீதிமன்றங்கள் – 04
- வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில் மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தீர்ப்பாயம் – 01
- கோயம்புத்தூரில் கூடுதல் குடும்ப நல நீதிமன்றம் – 01
- சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சேலம், கடலூர், பெரம்பலூர், செங்கல்பட்டு மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களில் குற்றவியல் நடுவர் நீதிபதி தரத்தில் கூடுதல் மகளிர் நீதிமன்றங்கள் – 10

- பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறித்த வழக்குகளை விசாரிக்க மாவட்ட நீதிபதி பதவி தரத்தில் தருமபுரி, திண்டுக்கல், ஈரோடு, நாகர்கோயில், கரூர், கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம், நாமக்கல், நீலகிரி, இராமநாதபுரம், சிவகங்கை, தஞ்சாவூர், தேனி, தூத்துக்குடி, திருவள்ளூர், திருவண்ணாமலை, திருவாரூர், வேலூர், விழுப்புரம், ஸ்ரீவில்லிபுத்தூர், அரியலூர் மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில் மகளிர் விரைவு நீதிமன்றங்கள் – 22
- திண்டுக்கல், ஈரோடு, திருநெல்வேலி, சிவகங்கை, திருவள்ளூர், செங்கல்பட்டு, விழுப்புரம், வேலூர், திருச்சிராப்பள்ளி, தருமபுரி, திருவாரூர், விருதுநகர் மற்றும் நீலகிரி ஆகிய இடங்களில் குடும்பநல நீதிமன்றங்கள் – 13
- பட்டியலின வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம் **1989**ன் கீழ் பதிவு செய்யப்பட்ட – 02

வழக்குகளை விசாரிப்பதற்கு விழுப்புரம் மற்றும் சிவகங்கையில் மாவட்ட நீதிபதி பதவி தரத்தில் சிறப்பு நீதிமன்றங்கள்

- பெரம்பலூர் மாவட்டத்தை தவிர்த்து 31 மாவட்டங்களில் மாலை நேர நீதிமன்றங்கள் – 31

- மோட்டார் வாகன விபத்து இழப்பீடு அசல்மனு தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கு தருமபுரி மாவட்டம், தருமபுரியில் மாவட்ட நீதிபதி பதவி தரத்தில் ஒரு சிறப்பு நீதிமன்றம் மற்றும் சார்பு நீதிபதி பதவி தரத்தில் ஒரு சிறப்பு நீதிமன்றம். – 02

**பிற நீதிமன்றங்கள்**

- திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூரில் சார்பு நீதிமன்றம் – 01

- திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு, தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிபட்டி மற்றும் தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் ஆகிய இடங்களில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் – 03

- வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் – 01
- புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை, நீலகிரி மாவட்டம், பந்தலூர், தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர், திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி, திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி மற்றும் விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை ஆகிய இடங்களில் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் – 06
- கன்னியாகுமரி மாவட்டம், பூதப்பாண்டி மற்றும் மதுரை மாவட்டம், பேரையூர் ஆகிய இடங்களில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள் – 02
- கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரில் உள்ள கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் – 01
- கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை மற்றும் வேலூர் மாவட்டம், அரக்கோணம் ஆகிய இடங்களில் சார்பு நீதிமன்றங்கள் – 02

- கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர் – 01

**மொத்தம் – 158**

**25. பிற வசதிகள்**

- ரூ.10.38 கோடி செலவில் 49 கூடுதல் அமர்வு மற்றும் மாவட்ட நீதிமன்றங்களுக்கு 389 பணியிடங்கள் தோற்றுவிக்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.
- ஆண்டொன்றுக்கு ரூ.10,76,880/– தொடர் செலவினத்தில் சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியின் அலுவலக இருப்பிடத்திற்கு இரண்டு கண்காணிப்பாளர் (சமையல்) மற்றும் மூன்று உணவு பரிமாறுபவர் பதவிகள் புதியதாக உருவாக்க ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- ரூ.1,25,460/– தொடர் செலவினத்தில் கடலூர் மாவட்டம், திட்டக்குடியில் உள்ள மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றத்திற்கு ஓர் உதவியாளர் பதவி உருவாக்க ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- நீடாமங்கலம் மற்றும் வலங்கைமான் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்களுக்கு தலா ஒரு உதவி குற்ற வழக்கு நடத்துநர் பதவியை

ரூ.14,54,160/– தொடர் செலவினத்தில் உருவாக்க ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- திருப்பூர் தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு ஆண்டிற்கு ரூ.7,76,320/– செலவில் ஒர் அரசு கூடுதல் வழக்கு நடத்துனர் பணியிடம் புதியதாக தோற்றுவிக்கப்பட்டுள்ளது.
- நவம்பர், 2013லிருந்து மார்ச் 2015 வரை 35 நீதிமன்ற மேலாளர்களுக்கு உதவியாக தலா ஒர் தட்டச்சர் மற்றும் ஒர் அலுவலக உதவியாளர் மாதந்தோறும் முறையே ரூ.12,000/– மற்றும் ரூ.8,000/– தொகுப்பூதியத்தில் நியமனம் செய்ய ரூ.1.19 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- கோயம்புத்தூர், கடலூர், காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களிலுள்ள நீதிமன்றங்களுக்கு ரூ.4.80 இலட்சம் செலவில் தீயணைப்பு கருவிகள் வழங்க ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- நீதிபதிகளின் பிரிவு உபசார விழா, உச்சநீதிமன்ற நீதிபதிகள் மற்றும் பிற உயர்நீதிமன்ற நீதிபதிகளின் வருகை, நீதிபதிகளின் முழு அமர்வு கூட்டம் மற்றும் நீதிபதிகளின் குழு கூட்டம் மற்றும் அது தொடர்பான

விருந்தோம்பல் மற்றும் இதர செலவினங்களுக்காக ரூ.**17.00** இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- சார்நிலை நீதிமன்றங்களிலுள்ள நீதித்துறை அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட **695** மடிக்கணினிகளின் RAM ன் தரம் ரூ.**17.15** இலட்சம் செலவில் உயர்த்தப்பட்டுள்ளது.
- மாவட்ட மற்றும் சார்நிலை நீதிமன்றங்களில் உள்ள மின்னாக்கிகளுக்கு எரிபொருள் வழங்கும் செலவிற்காக ரூ.**13.20** இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.
- ரூ.**92.15** இலட்சம் செலவில் புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட **166** சார்நிலை நீதிமன்றங்களின் நீதித்துறை அலுவலர்களுக்கு மடிக்கணினி மற்றும் அச்சுப்பொறிகள் வழங்கப்பட்டுள்ளது.
- விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி, வேலூர் மாவட்டம், இராணிப்பேட்டையிலுள்ள சார்பு நீதிமன்றங்கள் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டம் செங்கல்பட்டில் உள்ள முதன்மை மாவட்ட நீதிமன்றம் ஆகியவற்றிற்கு ஒளி நகல் இயந்திரம் மற்றும் பிற உபகரணங்கள் வாங்குவதற்கு ரூ.**3.16** இலட்சம் செலவில் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- பல்வேறு மாவட்டங்களில் இயங்கி கொண்டிருக்கும் சார்நிலை நீதிமன்றங்கள் மற்றும் உயர்நீதிமன்றத்திற்கு ஒளிநகல் இயந்திரம் மற்றும் பிறஉபகரணங்கள் வாங்குவதற்கு ரூ.**15.96** இலட்சம் செலவில் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- சென்னையிலுள்ள மத்திய குற்றப்பிரிவு மற்றும் மாநகர குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத்துறை வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம் மற்றும் ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் வரும் வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம் ஆகியவற்றிற்கு ஒளிநகல் கருவி வாங்குவதற்கு ரூ.**1.62** இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- ஒன்பது நடமாடும் நீதிமன்ற பேருந்துகளில் கூடுதல் வசதிகள் செய்வதற்காக ரூ.**6.24** இலட்சம் கூடுதல் செலவினமாக ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- விழுப்புரம், சேலம், சிவகங்கை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களிலுள்ள ஊழல் தடுப்புச்சட்டத்தின் கீழ் வரும் வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்களில் கணிப்பொறி வசதிகள் செய்வதற்காக ரூ.**4** இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- சென்னையிலுள்ள விடுமுறைகால குடும்பநல நீதிமன்றங்களில் பணிபுரியும் நீதிபதிகள் மற்றும் அலுவலர்களுக்கு 2012–13 மற்றும் 2013–14 ஆண்டுகளுக்கான மதிப்பூதியம் ரூ.28.85 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- குடும்பநல நீதிமன்றங்களில் பணிபுரியும் ஆலோசகர்களுக்கு (Counsellors) ஊதியத்தை ரூ.200ல் இருந்து ரூ.400 ஆக உயர்த்தியதன் பொருட்டு ரூ.10.08 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- குற்றவியல் நீதிபதி பதவி தரத்தில் உள்ள 39 விரைவு நீதிமன்ற நீதிபதிகளின் அலுவலகம் மற்றும் இல்லங்களுக்கு தொலைபேசி வசதிகள் செய்வதற்காக ரூ.9.75 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- பெரம்பலூர் மகளிர் நீதிமன்றத்திற்கு ஒரு ஓட்டுநர் பணியிடம் ரூ.2 இலட்சம் (தொடரும் செலவினம்) ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- 35 நீதிமன்ற மேலாளர்களின் உபயோகத்திற்காக 10 GB–யுடன் கூடிய தகவல் அட்டைகள் 35 மடிக்கணினிகள் இரண்டு வருட திட்டத்தின்படி வழங்குவதற்கு ரூ.24,07,775/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- இம்மாநிலத்திலுள்ள பல்வேறு சார்நிலை நீதிமன்றங்களுக்கு அறைகலன்கள் வாங்குவதற்கு ரூ.2.46 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- 22 விரைவு மகளிர் நீதிமன்றங்களின் நீதிபதிகளுக்கு 22 குளிர்சாதன வசதியுடன் கூடிய மகிழுந்துகள் வாங்குவதற்காக கூடுதலாக ரூ.55 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- குற்றவியல் நீதிபதி பதவி தரத்திலுள்ள 10 கூடுதல் மகளிர் நீதிமன்ற நீதிபதிகளின் அலுவலகம் மற்றும் இல்லங்களுக்கு தொலைபேசி வசதிகள் செய்வதற்காக ரூ.2.5 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- சென்னையில் இயங்கும் I முதல் XVIII வரையிலான மாநகர உரிமையியல் நீதிமன்றங்களுக்கு தலா ஒரு தட்டச்சர் பணியிடம் வீதம் 18 தட்டச்சர் பணியிடங்கள் உருவாக்கவும், அறைகலன்கள் வாங்குவதற்கும் ரூ.60.38 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- கோயம்புத்தூரிலுள்ள மகளிர் நீதிமன்றத்திற்கு தலா ஒரு ஓட்டுநர், இரவு காப்பாளர் மற்றும் ஒரு மசால்சி (Masalchi) பணியிடங்கள் ரூ.4.68 இலட்சம் (தொடரும் செலவினம்) ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையிலுள்ள நீதிபதிகளின் குடியிருப்புகளுக்கு டீசல் மின்னாக்கி (Diesel Generator) வசதி ஏற்படுத்த ரூ.25.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- 2013–14ஆம் ஆண்டில் மாவட்ட நீதிபதி பதவியிடங்களை நேரடியாக நிரப்புவதற்கான தேர்வு தொடர்பான செலவினங்களுக்காக ரூ.12.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- மதுரையில் மண்டல நீதித்துறை பயிற்சிக் கழக கட்டடம் கட்டுவதற்காக ரூ.961.00 இலட்சம் (ஏற்கனவே வழங்கப்பட்ட ரூ.850.00 இலட்சத்திற்கும் கூடுதலாக ரூ.111.00 இலட்சம்) ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- புதியதாக நியமனம் செய்யப்பட்டுள்ள 23 பயிற்சி மாவட்ட நீதிபதிகளுக்கு உதவிட ரூ.157.32 இலட்சம் செலவில் பணியாளர்களும், 23 கணினிகள் வழங்குவதற்காக ரூ.15.64 இலட்சமும் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- மாநிலத்திலுள்ள 424 நீதிபதிகளின் கைபேசி அழைப்பு கட்டணங்களுக்கென ரூ.50 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- மாநிலத்திலுள்ள 95 நீதிபதிகளுக்கு இணையதள வசதி அளிக்கவும், 60 நீதிபதிகளின் இல்ல அலுவலக இணையதள திட்டத்தினை மாற்றுவதற்கும் (change of plan) ரூ.17.42 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- சென்னை உயர்நீதிமன்ற அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர்கள் II, III மற்றும் V ஆகியோர்களுக்கு மூன்று டோயோட்டோ இனோவோ மகிழுந்துகள் வாங்குவதற்கு ரூ.40.38 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையிலுள்ள மின்னணு தகவல் பலகைகளை புதிய தொழில்நுட்பத்துடன் மாற்றுவதற்கு ரூ.1.88 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- சென்னை மாநகர தலைமை குற்றவியல் நடுவருக்கு மாருதி SX4 வாகனம் வாங்குவதற்கு ரூ.7.67 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- சென்னை நீதித்துறை பயிற்சிக் கழகத்திலுள்ள நூலகர் பணியிடத்திற்கான சம்பள விகிதம் 15600–39100 + தர ஊதியம் 5700– ஆக மாற்றியமைக்கப்பட்டு, ரூ.1.92 இலட்சம் (தொடரும் செலவினம்) ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- புதியதாக தேர்தெடுக்கப்பட்டு பயிற்சியிலுள்ள 23 மாவட்ட நீதிபதிகளுக்கு ஊதியம் வழங்குவதற்காக ரூ.3,51,07,520/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- உரிமையியல் நீதிபதி பதவியிடத்தில் 2013–14 ஆம் ஆண்டுக்கான காலிப்பணியிடங்கள் 162 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.

## 26. தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக்குழு

**நோக்கம்**

26.1 சட்டப் பணிகள் ஆணைக் குழு (1994–ஆம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்டது) சட்டம், 1987, சமுதாயத்தில் மிகவும் நலிவடைந்த பிரிவினருக்கு இலவசமாகவும், சட்டம் சார்ந்த சேவைப் பணிகளை வழங்கவும், பொருளாதார அல்லது ஏனைய இயலாமைகள் காரணமாக எந்த ஒரு குடிமகனுக்கும் நீதி கிடைப்பதற்கான வாய்ப்புகள் மறுக்கப்படக் கூடாது என்பதை உறுதி செய்வதற்கும், தகராறுகளுக்குத் தீர்வு காணும்

ஒரு மாற்று அமைப்பாக மக்கள் நீதிமன்றங்களை சட்டப்பூர்வமாக ஏற்படுத்துவதற்கும், சமுதாயத்தில் ஏழை எளிய மக்களுக்கு அவர்களுடைய உரிமைகள் குறித்து பயிற்றுவிக்கவும், சமூக நலன் குறித்த பல்வேறு சட்டங்கள் மற்றும் நிருவாக ஆணைகளின்படி அவர்களுக்குண்டான பயன்கள் மற்றும் சலுகைகளைப் பெற வழிவகை செய்யவும் இயற்றப்பட்டது. மேற்குறிப்பிட்ட பணிகளை செயல்படுத்த மாநில சட்டப் பணிகள் ஆணைக்குழு, மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுக்கள், வட்ட சட்டப்பணிகள் குழுக்கள் மற்றும் உயர்நீதிமன்ற சட்டப்பணிகள் குழுக்கள் ஆகியவை அமைக்க இச்சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**அமைப்பு**

**26.2** மேற்கண்ட சட்டத்திற்கு இணங்க, மாநில அளவில் தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு மற்றும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மாநிலம் முழுமையுமாக எங்கெல்லாம் நீதிமன்றங்கள் உள்ளனவோ அங்கெல்லாம் வட்ட சட்டப்பணிகள் குழுக்களும் மற்றும் உயர் நீதிமன்ற சட்டப் பணிகள் குழுவும் மாநில சட்டப்பணிகள்

ஆணைக்குழுவால் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது 29 மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழுக்களும், 149 வட்ட சட்டப் பணிகள் குழுக்களும் மற்றும் 2 உயர்நீதிமன்ற சட்டப் பணிகள் குழுக்களும் இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன.

**சட்ட உதவி பெற தகுதியுடையோர்**

26.3 சட்டப்பணிகள் ஆணைக்குழு சட்டம், 1987, பிரிவு 12–ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் நபர்கள் வழக்கு தொடுக்கவும், எதிர்த்து வழக்காடவும் சட்டஉதவி பெறவும் தகுதியுடையவர்களாவர் :–

(i) ஆதிதிராவிடர் (அல்லது) பழங்குடியினர்

(ii) அரசியலமைப்பு சட்டப்பிரிவு 23-ல் குறிப்பிடப்பட்டுள்ள மனிதர்களை விற்பதும், வாங்குவதும், வற்புறுத்தி வேலை வாங்குவதால் பாதிக்கப்பட்ட நபர் (அல்லது) பிச்சை எடுப்பவர்கள்

(iii) பெண் (அல்லது) குழந்தை

(iv) மாற்று திறனாளிகள்

(v) பேரிடர்கள், இன வன்முறை, சாதி வன்கொடுமை, வெள்ளம், பஞ்சம், நில அதிர்ச்சி, தொழிற்சாலை பேரழிவு ஆகியவற்றால் பாதிப்பிற்கு உள்ளானவர்கள்

(vi) தொழிற்சாலை தொழிலாளர்கள்

(vii) சிறைக் காவலில் இருப்போர், பாதுகாப்பு இல்லம், இளம் குற்றவாளிகள் இல்லம், மன நல மருத்துவமனை அல்லது மனநல காப்பகம் இவைகளில் காவலில் உள்ளவர்கள் உட்பட

(viii) சட்டப்பணிகள் ஆணைக்குழு சட்டம், 1987, பிரிவு 12(எச்)ல் குறிப்பிட்ட வருடாந்திர வருமானத்திற்கு உட்பட்டவர்கள்.

சட்ட உதவி வேண்டுபவர்கள் எந்தவித நீதிமன்ற கட்டண வில்லை இல்லாமல் தங்களது கோரிக்கைகளை மனு வடிவில் அளிக்கலாம். எழுத்தறிவில்லாதவர்கள் வாய் மொழியாக தங்களது கோரிக்கைகளை அளிக்கலாம். அவை சட்டப் பணிகள் ஆணைக்குழு அலுவலரால் அல்லது குழுவால் மேல் நடவடிக்கைக்காக பதிவு செய்து கொள்ளப்படும்.

**26.4 ஆலோசனை மற்றும் சமரச மையம்**

மாநிலத்தில், ஆலோசனை மற்றும் சமரச மையங்கள் வழக்குகளை நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லாமலே உடன்பாடு காண ஒரு கருவியாக இயங்கி வருகின்றன. ஆலோசனை வழங்கும் வழக்கறிஞர் இருதரப்பினருக்கு இடையே உள்ள பிரச்சனைகளுக்கு சுமூக தீர்வு காண்பதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறார். இவ்வாறு, பிரச்சனைகளை

அடிப்படையிலேயே தீர்த்து வைக்கின்ற ஒரு மாற்று முறை தீர்ப்பு அமைப்பாக இந்த மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

**மகளிருக்கான மையங்கள்**

**26.5** சமூகத்தின் நலிந்த பிரிவினரான பெண்களுக்கு அவர்களது திருமணம் தொடர்பான பிரச்சனைகள் மற்றும் இதர பிரச்சனைகளுக்கும் தீர்வு காண்பதற்கு மகளிருக்கான மையங்கள் மூலம் உதவிகள் வழங்க முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

**சட்டம் சார்ந்த உதவிகள்**

**26.6** குற்ற வழக்கில் பாதிக்கப்பட்டவர் சட்ட உதவிகள் பெறுவதற்கும், மோட்டார் வாகன விபத்துகளில் பாதிக்கப்பட்டவர்கள் உரிய இழப்பீடு பெறுவதற்கும் மற்றும் சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள ஏழை எளிய மக்கள் அரசால் அளிக்கப்படும் சமூக நலத்திட்டங்களான முதியோர் ஓய்வூதியம், விதவைகள் ஓய்வூதியம் போன்ற உதவிகளை அரசிடமிருந்து பெறுவதற்கும், சட்டப்பணிகள் ஆணைக் குழுக்கள் இலவசமாக சட்ட உதவிகள் வழங்குகின்றன.

**மக்கள் நீதிமன்றம்**

**26.7** எந்த ஒரு நீதிமன்றத்திலும் நிலுவையிலுள்ள வழக்கையோ அல்லது அந்த நீதிமன்ற அதிகார வரம்புக்குள்

வருகின்ற ஆனால் வழக்காகத் தாக்கல் செய்யப்படாத எந்த பொருள் பற்றியும் அதில் சம்மந்தப்பட்ட தரப்பினர்களுக்கிடையே ஒரு உடன்பாடு அல்லது தீர்வுக்கு வருவதற்கு மக்கள் நீதிமன்றங்கள் உதவி செய்கின்றன.

**சட்ட உதவி முகாம் மற்றும் சட்ட அறிவு விளக்க முகாம்**

**26.8** ஊரகப் பகுதிகளில் சட்ட உதவி முகாம் மற்றும் சட்ட அறிவு விளக்க முகாம்கள் குறிப்பிட்ட காலமுறைப்படி நடத்தப்படுகின்றன. வருவாய்த்துறை, காவல்துறை மற்றும் பிற துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள் இந்த முகாம்களில் கலந்துகொள்ள அழைக்கப்படுகிறார்கள். சட்டப்பணிகள் ஆணைக்குழுவால் அனுப்பிவைக்கப்படும் வழக்கறிஞர்களும் இம்முகாமில் கலந்து கொண்டு பொதுமக்களிடம் மனுக்கள் பெறுவதோடு, மனுக்கள்மீது சட்டஆலோசனைகளையும் வழங்குகிறார்கள். மனுதாரர்களின் மனுக்கள், இம்முகாம்களில் கலந்து கொண்ட சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களை கொண்டு பரிசீலனை செய்யப்பட்டு முடியுமானால் அந்த இடத்திலேயே உடனடித் தீர்வு காணப்படுகிறது. **2013-14**ஆம் ஆண்டிற்கான மக்கள் நீதிமன்றங்கள், மாபெரும் மக்கள் நீதிமன்றங்கள் மற்றும் சட்ட அறிவு விளக்க முகாம்கள் நடத்துவதற்கு அரசால் ரூ.**296.60** இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

**மத்திய சிறைச்சாலைகளில் சட்ட உதவி மையம் மற்றும் மக்கள் சிறை நீதிமன்றம்**

**26.9** சட்ட உதவி மையம் மற்றும் மக்கள் சிறை நீதிமன்றங்கள், சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, வேலூர், கடலூர், சேலம், திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் மத்திய சிறைகளிலும் மற்றும் வேலூரில் உள்ள பெண்கள் தனிச்சிறையிலும் செயல்பட்டு வருகின்றன. சென்னை புழலிலுள்ள மத்தியச் சிறைச்சாலையில் ஒரு சட்ட உதவி மையம் இயங்கி வருகிறது. சிறை நீதிமன்றம் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நடைபெறுகிறது. சிறை சட்ட உதவி மையங்களில் சிறைவாசிகளிடமிருந்து மனுக்கள் பெறப்பட்டு அவை சட்ட உதவி மையங்களில் உள்ள உரிய பதிவேடுகளில் பதியப்பட்டு அவற்றின்மீது மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

**சட்ட உதவி வழக்குரைஞர் திட்டம்**

**26.10** இத்திட்டத்தின்படி, குற்றவியல் நீதிமன்ற நடுவரின் முன்பாக காவலில் வைப்பதற்கு ஆஜர்படுத்தப்படும் நபர்கள் வழக்குரைஞர்கள் வைத்துக்கொள்ள வசதியற்றவர்களாக இருப்பின், அவர்களுக்கு சட்ட உதவி அளிக்க சட்டப்பணிகள் ஆணைக்குழு மூலம் வழக்குரைஞர்கள் குற்றவியல்

நீதிமன்றங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறார்கள். காவலில் உள்ள நபர்களுக்கு பின்வரும் மூன்று நிலைகளில் இந்த திட்டம் முக்கியத்துவம் அளிக்கிறது:

I. காவலில் உள்ளவர்கள் பிணையில் வெளிவருவதற்கும் மீண்டும் காவலில் வைப்பதற்கான ஆணையை எதிர்ப்பதற்கும் உதவுகிறது.
II. காவலில் உள்ளவர்கள் வழக்கை எதிர்கொள்வதற்கான சட்ட உதவி.
III. பாதகமான உத்திரவுகளை எதிர்த்து மேல் முறையீடு மற்றும் மறு ஆய்வு செய்வதற்கான சட்ட உதவி.

**மாற்றுத் தீர்வு மையங்கள்**

**26.11** உரிமையியல் நடைமுறை விதிகள் தொகுப்பு பிரிவு **89**–ன்படி, ஒவ்வொரு மாவட்டத்திலும், மாற்று முறைத் தீர்வு மையங்கள் அமைக்கப்பட்டு, சமரச நடவடிக்கைகள், மக்கள் நீதிமன்றங்கள் மற்றும் பிற மாற்று முறை தீர்வுகளுக்கும் இணைப்பு பாலமாக செயல்படும். இவ்வரசு, சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் மாற்றுத் தீர்வு மையக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.**4.20** கோடியும், மீதமுள்ள **29** நீதித்துறை மாவட்டங்களில் மாற்றுத் தீர்வு மையக் கட்டடங்கள் கட்டுவதற்கு

ரூ.29.00 கோடியும் ஒப்பளித்துள்ளது. மேற்கூறியவற்றில், சென்னையிலுள்ள மாற்று தீர்வு மையமானது முன்னாள் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி மாண்புமிகு நீதியரசர் திரு.பி.சதாசிவம் அவர்களால் 2013 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 20ம் நாள் துவக்கி வைக்கப்பட்டது. மேலும் மாற்றுத் தீர்வு மையங்கள் வேலூர், கிருஷ்ணகிரி, சேலம், தேனி, திண்டுக்கல், மதுரை, நாமக்கல், கடலூர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களிலும் துவக்கப்பட்டுள்ளன.

**நிரந்தர மக்கள் நீதிமன்றம்**

26.12 சட்டப்பணிகள் ஆணைக்குழு சட்டம், 1987, பிரிவு 22 பி– ன்படி, இம்மாநிலத்தில் நிரந்தர மக்கள் நீதிமன்றங்கள் 32 மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த நிரந்தர மக்கள் நீதிமன்றங்களை ஏற்படுத்த ரூ.7,70,70,784/- ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

**தேசிய மாபெரும் மக்கள் நீதிமன்றம்**

26.13 தேசிய அளவிலான மக்கள் நீதிமன்றம் நாடு முழுவதும் உச்சநீதிமன்றம் முதல் வட்ட அளவிலான நீதிமன்றம் வரை அனைத்து நீதிமன்றங்களிலும் 2013 மற்றும் 2014 ஆகிய ஆண்டுகளில் முறையே 23.11.2013 மற்றும் 12.04.2014 அன்று நடத்தப்பட்டது. 2013ம் ஆண்டு நடைப்பெற்ற மக்கள்

நீதிமன்றத்தில் ஒரே நாளில் **13,77,252** வழக்குகள் முடிக்கப்பட்டு ரூ.**1140,32,91,487/–**க்கு தீர்வு கண்டதன் மூலம் தமிழ்நாடு நாட்டிலேயே முதல் மாநிலமாக திகழ்கிறது. **2014–**ம் ஆண்டில் நடைப்பெற்ற மக்கள் நீதிமன்றத்தில், தமிழ்நாட்டில் மட்டும் ஒரே நாளில் **15,08,767** வழக்குகள் முடிக்கப்பட்டு ரூ.**915,07,52,090/–**க்கு தீர்வு காணப்பட்டது. இதன்மூலம் இம்மாநிலம் நாட்டிலேயே மீண்டும் முதலிடம் பெற்றுள்ளது.

**தொலைபேசி வழி சட்ட உதவி**

**26.14** சென்னையிலுள்ள தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் சட்ட உதவி மையக் கட்டடத்தில் சட்ட உதவி மையம் ஒன்று தொலைபேசி வழி சட்ட உதவி அளிக்கும் பொருட்டு இயங்கி வருகின்றது. இம்மையத்திற்கு சுழற்சி முறையில் காலை மற்றும் மாலை இருவேளையும், அனைத்து வேலை நாட்களிலும், வழக்கறிஞர்கள் அனுப்பி வைக்கப்பட்டு பொதுமக்களின் சட்டம் சார்ந்த பிரச்சனைகளுக்கு தொலைபேசி வாயிலாக தக்க ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகள் வழங்குகிறார்கள். சட்ட உதவி கோரும் பொதுமக்கள் **044–25342441** என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம்.

**27. அரசு வழக்காடும் துறை, உயர்நீதிமன்றம், சென்னை**

27.1 அரசு வழக்காடும் துறை, சென்னை உயர்நீதிமன்றத்தில் 1997ஆம் ஆண்டு அரசு மாநில தலைமை வழக்கறிஞரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் அமைக்கப்பட்டது. மாநில அரசின் கூடுதல் தலைமை வழக்கறிஞர்கள் I முதல் III மற்றும் V, சென்னை உயர்நீதிமன்றத்தின் அரசு குற்றவியல் வழக்கு நடத்துனர், அரசு உரிமையியல் வழக்கறிஞர் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையின் கூடுதல் அரசு குற்றவியல் வழக்கு நடத்துனர், அரசு சிறப்பு வழக்கறிஞர் ஆகியோரின் கீழ் இயங்கும் பகுதி அலுவலகங்கள் மாநில தலைமை வழக்கறிஞரின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படுகின்றன. ஒரு கூடுதல் தலைமை வழக்கறிஞர் உச்சநீதிமன்றத்தில் மாநில அரசின் சார்பாக வழக்குகளை வாதாட நியமிக்கப்பட்டுள்ளார்.

27.2 அரசு வழக்காடும் துறையில் மேற்கண்ட 10 பிரிவு அலுவலகங்களில் உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளை நடத்திட 148 சட்ட அலுவலர்களும், 274 அமைச்சுப் பணியாளர்களும் பணிபுரிகின்றனர்.

**சட்ட அலுவலர்களுக்கான கட்டடம்**

27.3 சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் 48,000 சதுர அடி பரப்பளவில் சட்ட அலுவலர்களுக்காக தரைத்தளம் +

நான்கு அடுக்குகளைக் கொண்ட கட்டடம் கட்டுவதற்காக ரூ.7.45 கோடி ஒப்பளிப்பு வழங்கப்பட்டு கட்டுமானப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

**பணியாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தல்**

27.4 அரசு மாநில தலைமை வழக்குரைஞர் அலுவலகத்தில் 10 கூடுதல் அமைச்சுப் பணியிடங்களுக்கு அரசால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும், அறைகலன்கள் மற்றும் கணிப்பொறிகள் வாங்குவதற்காக ரூ.1,52,261/- ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

**அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர்களுக்கு வாகனங்கள்**

27.5 சென்னை உயர்நீதிமன்ற அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர்கள் II, III மற்றும் V ஆகியோர்களுக்கு மூன்று டோயோட்டோ இனோவோ மகிழுந்துகள் வாங்குவதற்கு ரூ.40.38 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

## 28. குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககம்

28.1 குற்ற வழக்குத் தொடர்வு இயக்கத்தின் முக்கிய குறிக்கோள் மாநிலத்திலுள்ள தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றங்களில் தொடுக்கப்பட்ட குற்ற வழக்குகளை முழு கட்டுப்பாட்டுடன் திறம்பட நடத்துவதும், மேற்காணும் நீதிமன்றங்களின் அரசு

குற்ற வழக்கு நடத்துனர்கள் பணிகளை கண்காணிப்பதும் ஆகும்.

**குற்ற வழக்குத் தொடர்வுத் துறை அமைப்பு**

**28.2** குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககம் குற்ற வழக்குத் தொடர்வுத்துறை இயக்குநரின் நிர்வாகக்கட்டுப்பாட்டின் கீழ் சென்னையில் இயங்கி வருகிறது. குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநருக்கு அவரின் நிர்வாகப் பொறுப்புகளில் உதவி புரிந்திட ஒரு இணை இயக்குநர் (நிர்வாகம்) பணியிடமும், அரசு வழக்கு நடத்துனர்களின் பயன்பாட்டிற்கென வெளியிடப்படும் "தமிழ்நாடு குற்ற வழக்கு நடத்துனர் மாதாந்திர இதழ்" பதிப்பிற்க்கான வேலையை கவனிப்பதற்காக தனியே உதவி இயக்குநர் தரத்திலான ஒரு இணை இதழாசிரியர் பணியிடமும் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. இதைத்தவிர **11** துணை இயக்குநர் பணியிடங்களும், **14** உதவி இயக்குநர் பணியிடங்களும், **30** அரசு கூடுதல் வழக்கு நடத்துனர் பணியிடங்களும், அரசு உதவி குற்ற வழக்கு நடத்துனர் நிலை–**1** தரத்திலான **94** பணியிடங்களும், அரசு உதவி குற்ற வழக்கு நடத்துனர் நிலை–**2** தரத்திலான **192** பணியிடங்களும் இத்துறைக்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளன. அரசு கூடுதல் வழக்கு நடத்துனர்கள்/ அரசு உதவி குற்ற வழக்கு நடத்துனர்கள் நிலை–1 / அரசு உதவி

குற்ற வழக்கு நடத்துனர்கள் நிலை–2 ஆகியோர் முறையே தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் / மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் / குற்றவியல் நடுவர் நீதிமன்றம் ஆகியவற்றில் வழக்குகளை நடத்துகின்றனர். மேலும், இத்துறையின் கீழ் 323 அமைச்சுப்பணியாளர்களும் பணியாற்றுகின்றனர்.

28.3 இதை தவிர, 2 துணை இயக்குநர்கள், 18 கூடுதல் அரசு வழக்கு நடத்துனர்கள், 25 அரசு உதவி வழக்கு நடத்துனர்கள் நிலை –1 மற்றும் 12 அரசு உதவி வழக்கு நடத்துனர்கள் நிலை–2 ஆகியோர் அயற்பணியில் காவல்துறை, சிறைத்துறை, பொது சுகாதாரம், விவசாயத்துறை, மருந்துக்கட்டுப்பாடு, விதைச்சான்று இயக்குநரகம் ஆகியவற்றில் சட்ட ஆலோசகர்களாக பணிபுரிந்து வருகின்றனர்.

**நேரடி நியமனம்**

28.4 தமிழ்நாடு குற்ற வழக்கு தொடர்வு துறையில் அரசு உதவி வழக்கு நடத்துனர் நிலை–2 பணிக்கு, 2012 ஆம் ஆண்டிற்கான காலி பணியிடங்களுக்கு 77 நபர்களும், 2013 ஆம் ஆண்டிற்கு 47 நபர்களும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

மேலும் அரசு உதவி வழக்கு நடத்துனர் நிலை–2 பதவிக்கான 88 காலிப்பணியிடங்களை நிரப்ப தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையமானது தகுந்த நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

**பதவி உயர்வு**

**28.5** குற்ற வழக்கு தொடர்வுத்துறையில் கீழ்கண்ட வழக்கு நடத்துனர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

- **2012** ஆம் ஆண்டில் **29** அரசு உதவி வழக்கு நடத்துனர்கள் நிலை–**1**லிருந்து அரசு கூடுதல் வழக்கு நடத்துனர்/ குற்ற வழக்கு தொடர்வு உதவி இயக்குநர்களாக பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.
- **2013** ஆம் ஆண்டில், **52** அரசு உதவி குற்ற வழக்கு நடத்துனர் நிலை–**2**லிருந்து அரசு உதவி வழக்கு நடத்துனர் நிலை–**1** ஆக பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.
- **2013** ஆம் ஆண்டில், **29** அரசு உதவி வழக்கு நடத்துனர்கள் நிலை–**1** லிருந்து அரசு கூடுதல் வழக்கு நடத்துனர்கள் / அரசு உதவி இயக்குநர்களாக பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.
- **2013** ஆம் ஆண்டில் குற்ற வழக்குத்தொடர்வுத்துறை இயக்குநர், இணை இயக்குநர் (நிர்வாகம்) மற்றும் **13** துணை இயக்குநர் பணியிடங்களுக்கு பணி நியமனம் செய்யப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு அரசு குற்ற வழக்கு நடத்துனர் மாத இதழ்**

**28.6** மூன்றாவது காவல் ஆணைய பரிந்துரையின்படி, தமிழ்நாடு அரசு குற்ற வழக்கு நடத்துனர்களின் மாத இதழ் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படுகிறது. இதில், உச்சநீதிமன்றம் மற்றும் அனைத்து மாநிலங்களிலுள்ள உயர்நீதிமன்றங்களின் முக்கியமான தீர்ப்புகள் வெளியிடப்படுகின்றன. இது அரசு வழக்கு நடத்துனர்களுக்கு குற்றவியல் வழக்குகளை நடத்த பெரும் உதவியாக உள்ளது. தலைமை அலுவலகத்திலும் மண்டல மற்றும் மாவட்ட தலைமை அலுவலகத்திலும் சட்ட நூல்கள் அடங்கிய நூலகங்கள் ஏற்படுத்தப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

**பயிற்சி**

**28.7** அரசு குற்ற வழக்கு நடத்துனர்களுக்கான பயிற்சி என்ற தலைப்பின் கீழ் **13** வது நிதிக்குழுவின் மானியத்தின் மூலமாக மாநிலத்திலுள்ள அனைத்து அரசு குற்ற வழக்கு நடத்துனர்களுக்கு பணியிடைப்பயிற்சி அளிப்பதற்கு ரூ.**78.87** இலட்சம் வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது. இப்பணியிடைப் பயிற்சி அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையத்தின் மூலம் **645** குற்ற வழக்கு நடத்துனர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு அணியின் பயிற்சிகால அளவு **10** வேலை நாட்கள்

ஆகும். மேலும், புதியதாக பணியமர்த்தப்பட்டுள்ள அரசு உதவி வழக்கு நடத்துனர்களுக்கு (நிலை–2) அடிப்படை பயிற்சியாக இரண்டு வாரம் உள்ளரங்கப் பயிற்சியும் அதைதொடர்ந்து ஒரு வாரம் நீதிமன்றங்களில் செயல்முறை பயிற்சியும் அளிக்க ரூ.3,26,600/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

**கைப்பேசி சட்ட மென்பொருள்**

**28.8** **71** சட்டங்களை உள்ளடக்கிய கைப்பேசியில் பயன்படுத்தும் மென்பொருள் அனைத்து குற்றவழக்கு நடத்துனர்களுக்கு ரூ.4,83,750/– செலவில் வழங்குவதற்கு அரசு ஆணையிட்டுள்ளது.

**குற்ற வழக்கு நடத்துனர்களுக்கான சட்டப் புத்தகங்கள்**

**28.9** குற்ற வழக்குத்தொடர்வு இயக்ககத்தின் சட்ட அலுவலர்களுக்கு அவர்களின் சட்டத்திறமை மற்றும் அறிவுத்திறனை பெருக்கிக் கொள்வதற்காக சட்டப்புத்தகங்கள் வாங்குவதற்கு 2011-12 மற்றும் **2012–13** ஆம் ஆண்டுகளில் முறையே ரூ.8,95,670/– மற்றும் ரூ.84,25,300/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

**குற்ற வழக்கு நடத்துனர்களுக்கு மடிக்கணினிகள், அச்சுப்பொறிகள், சட்டப் புத்தகங்கள் வழங்குதல்**

**28.10** குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககத்தைச் சார்ந்த **390** குற்றவியல் வழக்கு நடத்துனர்களுக்கு

மடிக்கணினிகள், அச்சுப்பொறிகள், கணினி பயிற்சி அளித்தல், சட்டப்புத்தகங்கள் மற்றும் உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றங்களின் தீர்ப்புரைகளை இணையம் மூலம் பெறும் வசதி ஆகியவற்றிற்காக ரூ.5,10,78,097/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

**29. மாநில வழக்காடும் கொள்கை – 2012**

**29.1** மாநிலத்திற்கென தனி வழக்காடும் கொள்கை உருவாக்கப்பட்டது. மாநிலத்தில் அதிக அளவில் நிலுவையிலுள்ள வழக்குகளில் தரமான வெளிப்படையான முறையில் இவ்வழக்குகளை அணுகி நிருவகித்து நடத்துவதற்கான அரசின் தீர்மானத்தை இந்த கொள்கை பிரதிபலிக்கிறது. இக்கொள்கையானது,

I. நிலுவையிலுள்ள வழக்குகளை மறு ஆய்வு செய்வதற்கும் பயனற்ற மற்றும் எரிச்சலூட்டக்கூடிய வழக்குகளை அடையாளம் கண்டு திரும்பப் பெறுவதற்கும்,

II. வழக்குகளை வாதிடவும் மேல்முறையீடு தாக்கல் செய்வது குறித்த வழிமுறைகளை உருவாக்குவதற்கும்,

III. தேவையில்லாத வழக்குகளை நீக்க அதிகாரக்குழு (Empowered Committee) அமைப்பதற்கும் வழிவகை செய்கிறது.

இக்கொள்கை கீழ்க்கண்ட மூன்று அடுக்கு முறை மூலம் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

I. மாநில அளவிலான செயலாக்கக்குழு (State Level Implementation Committee)

II. துறை அளவிலான செயலாக்கக்குழு (Department Level Implementation Committee)

III. மாவட்ட அளவிலான செயலாக்கக்குழு (District Level Implementation Committee)

**29.2** வழக்குகளின் முக்கிய காரணங்களைக் கண்டறிந்து நடைமுறைகளில் மாற்றமேதும் செய்வதற்கு பரிந்துரை செய்வதோடு, வழக்குகளை எல்லாக்கட்டங்களிலும் கண்காணிப்பதும் மற்றும் ஆய்வு செய்வதும் இக்குழுக்களின் முக்கிய பணிகளாகும்.

**29.3** பணியாளர்கள் மற்றும் வழக்கு தொடுப்பவர்கள் குறைகளைத் தீர்க்க ஒரு குறை தீர்க்கும் முறை (Grievance redressal system) ஏற்படுத்த இந்த வழக்காடும் கொள்கையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இந்த முறையைப் பின்பற்றுவதால் துறைகள், தேவையில்லாத வழக்குகளை துறை அல்லது மாவட்ட அளவிலான செயலாக்கக் குழுக்கள் மூலம் தடுக்கலாம். நீதிமன்ற வழக்குகளின் நடவடிக்கைகளைக்

கண்காணித்து வழக்குகள் நடத்துவதில் தாமதமின்மையை உறுதி செய்ய மாநிலத்திலுள்ள ஒவ்வொரு அரசுத் துறையிலும் மற்றும் துறைத் தலைமை இடங்களிலும் சட்டம் அறிந்த முதுநிலை நிர்வாக அலுவலர் (Senior Administrative Officer) ஒருவர் சட்ட ஒருங்கிணைப்பாளராக (Legal Nodal Officer) நியமிக்கப்படுவார் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

**29.4 மேல்முறையீடு செய்தல்**

I. மேல்முறையீடு செய்வது குறித்த இறுதி முடிவினை மாநில அளவிலான / துறை அளவிலான / மாவட்ட அளவிலான செயலாக்கக் குழுக்களே முடிவெடுக்கும்.

II. மேல் முறையீடு குறித்த தங்களது சட்ட கருத்தினை சட்ட அலுவலர்கள் அளிப்பதற்கு 15 நாட்கள் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

III. வழக்கு தொடர்பான விவரங்களை கொண்ட தேதிவாரியான சிறுகுறிப்புகளின் அடிப்படையில் மேல்முறையீடு தயாரித்தல் வேண்டும்.

IV. காலதாமதத்தினால் தள்ளுபடி செய்யப்பட்ட வழக்குகளின் பதிவேடு துறைத் தலைவர்களால் பராமரிக்கப்படவேண்டும். சட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ஒவ்வொரு வழக்கின்

காலதாமதத்திற்கான காரணத்தை விளக்கி மாதம் இருமுறை / காலாண்டு மற்றும் ஆண்டு அறிக்கை ஆகியவைகளை துறைத்தலைவருக்கு அனுப்ப வேண்டும்.

V. தவறிழைத்த அலுவலர்கள் காலதாமதத்திற்கு பொறுப்பாக்கப்படுவார்கள்.

**30. சென்னை உயர்நீதிமன்ற வளாகம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வளாகத்தில் காவல் கட்டுப்பாட்டு அறை கட்டுதல்**

சென்னை உயர்நீதிமன்ற வளாகம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வளாகத்தில், விரிவான பாதுகாப்பு முறையை பலப்படுத்த மின்னணு இயந்திரங்கள் மற்றும் இதர தொலை தொடர்பு சாதனங்கள் வாங்குவதற்கு சென்னை உயர்நீதிமன்றத்திற்கு ரூ.229.75 இலட்சமும் மற்றும் மதுரை கிளைக்கு ரூ.83.89 இலட்சமும் அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. உயர்நீதிமன்ற வளாகத்தில் விரிவான பாதுகாப்பு முறையை நடைமுறைப்படுத்த காவலர்களுக்கு அலுவலக அறை, ஓய்வறை மற்றும் தளவாடங்கள் வைப்பதற்கு அறை மிகவும் அவசியமாக இருந்தது. ஆகையால் சென்னை உயர்நீதிமன்ற வளாகம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வளாகத்தில் காவல் கட்டுப்பாட்டு அறை, காவலர்கள்

ஓய்வறை (ஆண் மற்றும் பெண்) மற்றும் தளவாடங்கள் வைப்பறை கட்டுவதற்கு முறையே ரூ.72.00 இலட்சம் மற்றும் ரூ.150.00 இலட்சம் அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

**31. விடுமுறை கால குடும்ப நல நீதிமன்றங்கள்**

பணிபுரியும் வழக்காடும் மக்களின் தேவை அறிந்து நாட்டிலேயே முதன் முறையாக சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் நான்கு விடுமுறை கால குடும்ப நல நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. விடுமுறை கால குடும்ப நல நீதிமன்றங்கள் தொடங்குவதற்கு முன்பு இருந்த நிலுவையை விட 25% கூடுதலான வழக்குகள் முடிவுக்கு கொண்டுவரப்பட்டன. குடும்ப வழக்குகளை விரைந்து முடிப்பதே குடும்ப நல நீதிமன்றங்களின் உயரிய குறிக்கோளாகும். சமரச முயற்சிகளும் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுகளே இங்கு வலியுறுத்தப்படுகிறது. குடும்ப நல நீதிமன்றங்களில் பணிபுரியும் நீதிபதிகள் மற்றும் அலுவலர்களுக்கு மதிப்பூதியத்தை அவ்வப்போது அரசு வழங்குகிறது.

**32. 2014–2015 ஆம் ஆண்டின் பகுதி–2 திட்டங்கள்**

2014–15 ஆம் ஆண்டிற்கான பகுதி–2 திட்டத்தின் கீழ் பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன:–

| வ. எண். | பணிகள் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சியில் நீதிபதிகளுக்கான குடியிருப்பு மற்றும் மாவட்ட நீதிமன்ற வளாகம் ஆகியவற்றிற்கு சுற்றுசுவர் கட்டுதல் | 22.18 |
| 2 | திருநெல்வேலி மாவட்டம், தென்காசியில் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்) அமைத்தல் | 32.97 |
| 3. | குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககத்திற்கு 7 இலக்க முறை நகலி கருவிகள் வாங்குதல் | 6.71 |
| 4. | குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககத்திற்கு 15 கணினிகள் வாங்குதல் | 8.67 |
| 5. | குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககத்திற்கு ஈப்பு (Jeep) வாங்குதல் | 5.86 |
| | **மொத்தம்** | **76.39** |

**33. முடிவுரை**

ஒரு சிறப்பான அரசுக்கு ஆதாரம் அதன் செம்மையான நீதிமுறைமையாகும். தமக்கு உறுதியானதொரு நீதி விரைந்து வழங்கப்படுவதற்கேற்ற நீதிபரிபாலனம் உள்ளது என்ற ஒரு எண்ணத்தை காட்டிலும் எந்த ஒரு பாதுகாப்போ, நலனோ ஒரு சராசரி குடிமகனுக்கு நன்மை பயக்காது. மக்களாட்சியில் நீதித்துறையின் பங்கு முதன்மையானது. நீதிநிருவாகமானது, நியாயமாகவும் விரைந்து செயல்படுவதும் இன்றியமையாததாகும். நீதிபரிபாலனம் விரைவாகவும் செம்மையாகவும் செயல்பட உயர்நீதிமன்றம் மற்றும் சார்நிலை நீதிமன்றங்களின் உடனுழைப்புடன் மாநில அரசு, சிறந்த நீதிமன்றங்கள் அமைப்பதுடன் போதுமான பணியிடங்கள், உள்கட்டமைப்பு மற்றும் தேவையான நிருவாக ஏற்பாடுகளையும் நிதி உதவியும் அளிக்க முடியும் என உறுதியாக நம்புகிறேன்.

**எஸ்.பி. வேலுமணி**
நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி,
சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்
சிறைச்சாலைகள் துறை அமைச்சர்

## பிற்சேர்க்கை – 1

*(பத்தி 2 – ஐக் காண்க)*

**தமிழ்நாடு நீதித்துறையின் படிநிலை அமைப்பு**

**முதன்மை இருப்பிட உயர்நீதிமன்றம், சென்னை மற்றும் மதுரையிலுள்ள சென்னை உயர்நீதிமன்றக் கிளை**

↓

| *உரிமையியல் நீதிமன்றங்கள்* | |
|---|---|
| **சென்னை மாநகர்** | **வெளியூர்** |
| சென்னை நகரத்திற்குள் எழும் ரூபாய் இருபத்தைந்து இலட்சத்திற்கும் அதிகமான மதிப்புள்ள வழக்குகளை சென்னை உயர்நீதிமன்றம் விசாரிக்கின்றது | மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்கள் |
| மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள் | சார்பு நீதிமன்றங்கள் |
| சிறுவழக்குகள் நீதிமன்றங்கள் | மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் |
| | மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள் |

| *குற்றவியல் நீதிமன்றங்கள்* | |
|---|---|
| **சென்னை மாநகர்** | **வெளியூர்** |
| பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்கள் |
| | தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் |
| | குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் |

## பிற்சேர்க்கை – 2

*(பத்தி 4 – ஐக் காண்க)*

**சென்னை மாநகரில் செயல்பட்டு வரும் நீதிமன்றங்கள் / தீர்ப்பாயங்களின் எண்ணிக்கை பற்றிய விவரம்**

| வ. எண் | நீதிமன்றங்களின் / தீர்ப்பாயங்களின் பெயர் | மாவட்ட நீதிபதி | | முதுநிலை உரிமையியல் நீதிபதி | | உரிமையியல் நீதிபதி |
|---|---|---|---|---|---|---|
| | | மாவட்ட நீதிமன்றங்கள் | மத்திய குற்ற புலனாய்வு வழக்கு -தனி நீதிமன்றங்கள் | பெருநகர் குற்றவியல் நடுவர் | இதர வகை பிரிவு | |
| 1. | மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள் | 14 | 6 | -- | 18 | 1 |
| 2. | சிறு வழக்குகள் நீதிமன்றங்கள் | 1 | -- | -- | 8 | 8 |
| 3. | பெருநகர் மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் | 2 | -- | 1 | 6 | 21* |
| 4. | தொழிலாளர் நல நீதிமன்றங்கள் | 4 | -- | -- | -- | -- |
| 5. | தொழில் தீர்ப்பாயம் | 1 | -- | -- | -- | -- |
| 6. | விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் | 1 | -- | -- | 1 | -- |
| 7. | அரசு போக்குவரத்து மேல்முறையீட்டு தீர்ப்பாயம் | 1 | -- | -- | -- | -- |
| 8. | இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் கீழ் வரும் தனி நீதிமன்றம் | 1 | -- | -- | -- | -- |
| 9. | தலைமை சொத்தாட்சியர் மற்றும் பொறுப்பு சொத்தாட்சியர் | 1 | -- | -- | -- | -- |
| 10. | துணை சொத்தாட்சியர் மற்றும் பொறுப்பு சொத்தாட்சியர் | -- | -- | -- | -- | 1 |
| 11. | குடும்ப நல நீதிமன்றங்கள் | 4 | -- | -- | -- | -- |
| 12. | மகளிர் நீதிமன்றம் | 1 | -- | -- | -- | -- |
| 13. | தமிழ்நாடு முதலீட்டாளர்கள் (நிதி நிறுவனங்களில்) பாதுகாப்புச் சட்டம் தனிநீதிமன்றம் | 1 | -- | -- | -- | -- |
| 14. | போதைமருந்துகள் மற்றும் மனமயக்கப்பொருட்கள் தடுப்புச்சட்டம் தனிநீதிமன்றங்கள் | 2 | -- | -- | -- | -- |
| 15. | குண்டு வெடிப்பு வழக்குகளை விசாரிப்பதற்கான அமர்வு நீதிமன்றம் | 1 | -- | -- | -- | -- |
| 16. | சென்னை மாநகராட்சி, சென்னை விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் | 1 | -- | -- | -- | -- |
| 17. | செயலாளர், மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, சென்னை | -- | -- | -- | 1 | -- |
| 18. | ஊழல் வழக்குகளை விசாரிப்பதற்கென சிறப்பு நீதிமன்றம் | -- | -- | -- | 1 | -- |
| 19. | மோட்டர் வாகன விபத்து இழப்பீடு வழக்குகள் – சிறப்பு நீதிமன்றங்கள் | -- | -- | -- | 2 | -- |
| 20. | நில அபகரிப்பு வழக்குகள் – சிறப்பு நீதிமன்றங்கள் | -- | -- | -- | -- | 2 |
| | **மொத்தம்** | **36** | **6** | **1** | **37** | **33** |

**மொத்த நீதிமன்றங்களின் எண்ணிக்கை – 113**

**( மாவட்ட நீதிபதிகள் –42, முதுநிலை உரிமையியல் நீதிபதிகள் –38, உரிமையியல் நீதிபதிகள்–33)**

*** குற்றவியல் நடுவர் தரத்தில் 4 விரைவு நீதிமன்றங்கள் உட்பட**

## பிற்சேர்க்கை – 3

*(பத்தி 4 – ஐக் காண்க)*

### மாநிலத்தில் செயல்படும் சார்நிலை நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்களின் எண்ணிக்கை பற்றிய விவரம்

| | | மாவட்ட நீதிபதி | | | | | | | | | முதுநிலை உரிமையியல் நீதிபதி | | | | | | | உரிமையியல் நீதிபதி | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வரிசை எண் | மாவட்டங்கள் | மாவட்ட நீதிமன்றங்கள் | குடிமை உரிமை பாதுகாப்புச் சட்ட தனி நீதிமன்றங்கள் | குண்டு வெடிப்பு வழக்கு/ இனக்கலவர வழக்கு நீதிமன்றங்கள் | தொழிலாளர் நல நீதிமன்றங்கள் | தனி நீதிமன்றம் இன்றியமையாப் பொருட்கள் சட்டம்/ போதை மருந்துகள் மற்றும் மன மயக்கப் பொருட்கள் தடுப்புச் சட்டம் | தனி நீதிமன்றங்கள் மத்திய புலனாய்வுத்துறை வழக்கு / முதலீட்டாளர்கள் பாதுகாப்புச் சட்டம் வழக்கு | குடும்ப நல நீதிமன்றங்கள் | மகளிர் நீதிமன்றங்கள் | தனி நீதிமன்றங்கள் மோட்டார் வாகன விபத்து இழப்பீடு | தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | சார்பு நீதிமன்றங்கள் | தனி நீதிமன்றம் மோட்டார் வாகன விபத்து இழப்பீடு | தனி நீதிமன்றங்கள் நில எடுப்பு வழக்குகள் | ஊழல் வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றங்கள் | மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு | வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் / விற்பனை வரிமேல்முறையீட்டு தீர்ப்பாயம் | மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் | குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | விரைவு நீதிமன்றங்கள்/கூடுதல் மகளிர் நீதிமன்றங்கள் | தனி நீதிமன்றங்கள் நில அபகரிப்பு வழக்குகள் | நடமாடும் நீதிமன்றங்கள் | மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 1. | அரியலூர் | 2 | -- | -- | -- | -- | -- | -- | 1 | - | -- | 1 | -- | 2 | -- | -- | -- | 3 | 2 | 1 | -- | -- | -- |
| 2. | கோயம்புத்தூர் | 5 | -- | 1 | 1 | 1 | 2## | 1 | 1 | - | 1 | 5 | 1 | -- | 1 | 1 | 2 | 5 | 10 | 3# | 1 | 1 | 2 |
| 3. | கடலூர் | 4 | -- | -- | 1 | -- | -- | -- | 1 | - | 1 | 8 | 1 | 1 | - | -- | -- | 9 | 9 | 1# | - | - | 4 |
| 4. | தருமபுரி | 2 | -- | -- | -- | -- | -- | 1 | 1 | 1 | 1 | 2 | 1 | -- | -- | -- | -- | 3 | 4 | 1 | 1 | - | 2 |
| 5. | திண்டுக்கல் | 2 | -- | -- | -- | -- | -- | 1 | 1 | - | 1 | 4 | 1 | -- | -- | 1 | -- | 5 | 6 | 1 | - | 1 | 3 |
| 6. | ஈரோடு | 5 | -- | -- | -- | -- | -- | 1 | 1 | 1 | 1 | 7 | 1 | -- | -- | -- | 1 | 8 | 7 | 2 | 1 | 1 | 2 |
| 7. | காஞ்சிபுரம் | 3 | -- | -- | -- | -- | -- | -- | 1 | - | 1 | 5 | - | -- | -- | -- | -- | 7 | 7 | 2# | - | 1 | 3 |
| 8. | கன்னியாகுமரி | 1 | -- | -- | -- | -- | -- | -- | 1 | - | 1 | 6 | - | -- | - | -- | -- | 9 | 6 | 2 | - | - | 2 |
| 9. | கரூர் | 1 | -- | -- | -- | -- | -- | -- | 1 | - | 1 | 3 | - | -- | -- | -- | -- | 3 | 4 | 1 | - | - | - |
| 10. | கிருஷ்ணகிரி | 3 | -- | -- | -- | -- | -- | -- | 1 | 1 | 1 | 4 | 1 | -- | -- | -- | -- | 1 | 3 | 1 | 1 | - | 4 |
| 11. | மதுரை | 5 | 1 | 1** | 1 | 3* | 2## | 1 | 1 | 1 | 1 | 6 | 1 | -- | 1 | 1 | 2 | 5 | 10 | 3# | 1 | 1 | 3 |
| 12. | நாகப்பட்டினம் | 1 | -- | -- | -- | -- | -- | -- | 1 | - | 1 | 3 | - | -- | -- | -- | -- | 4 | 5 | 2 | - | - | 1 |

**பிற்சேர்க்கை 3 ன் தொடர்ச்சி**

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 13. | நாமக்கல் | 2 | -- | -- | -- | -- | -- | -- | 1 | - | 1 | 3 | - | -- | -- | -- | -- | 5 | 4 | 1 | 1 | 1 | 1 |
| 14. | நீலகிரி | 1 | -- | -- | -- | -- | -- | -- | 1 | - | -- | 1 | - | -- | -- | -- | -- | 3 | 2 | 1 | 1 | - | 2 |
| 15. | பெரம்பலூர் | 1 | -- | -- | -- | -- | -- | -- | 1 | - | 1 | 1 | - | -- | -- | -- | -- | 1 | 2 | 1# | 1 | - | - |
| 16. | புதுக்கோட்டை | 2 | -- | -- | -- | 1 | -- | -- | 1 | - | 1 | 1 | - | -- | -- | -- | -- | 2 | 3 | - | - | - | 2 |
| 17. | இராமநாதபுரம் | 2 | -- | -- | -- | -- | -- | -- | 1 | - | 1 | 2 | - | -- | -- | -- | -- | 3 | 4 | - | 1 | - | 3 |
| 18. | சேலம் | 4 | -- | -- | 1 | 1 | -- | 1 | 1 | 1 | 1 | 6 | 2 | -- | 1 | 1 | 1 | 6 | 12 | 3# | 1 | 1 | 1 |
| 19. | சிவகங்கை | 1 | -- | -- | -- | -- | -- | 1 | 1 | - | 1 | 2 | - | -- | 1 | -- | -- | 4 | 3 | 1 | - | - | 4 |
| 20. | தஞ்சாவூர் | 3 | 1 | -- | -- | 1 | -- | -- | 1 | 1 | 1 | 6 | 1 | -- | -- | 1 | -- | 5 | 6 | 2 | 1 | - | 3 |
| 21. | தேனி | 2 | -- | -- | -- | -- | -- | -- | 1 | - | 1 | 3 | - | -- | -- | -- | -- | 3 | 3 | 2 | 1 | - | 2 |
| 22. | தூத்துக்குடி | 3 | -- | -- | -- | -- | -- | -- | 1 | - | 1 | 2 | - | -- | -- | 1 | 1 | 6 | 7 | 2 | 1 | - | 1 |
| 23. | திருச்சி | 3 | 1 | -- | 1 | -- | -- | 1 | 1 | 1 | 1 | 4 | 1 | -- | 1 | 1 | 1 | 8 | 9 | 1# | 1 | 1 | 1 |
| 24. | திருநெல்வேலி | 4 | 1 | -- | 1 | -- | -- | -- | 1 | - | 1 | 7 | 1 | -- | -- | 1 | 1 | 12 | 9 | 1# | 1 | 1 | 4 |
| 25. | திருப்பூர் | 4 | - | - | - | - | - | - | 1 | - | 1 | 3 | - | - | - | - | 1 | 6 | 8 | 1 | 1 | - | - |
| 26. | திருவள்ளூர் | 5 | -- | -- | -- | -- | -- | 1 | 1 | - | 1 | 4 | - | -- | -- | -- | -- | 8 | 9 | 1 | 1 | - | 1 |
| 27. | திருவண்ணாமலை | 1 | -- | -- | -- | -- | -- | -- | 1 | - | 1 | 4 | 1 | -- | -- | -- | -- | 8 | 5 | 1 | - | - | 2 |
| 28. | திருவாரூர் | 1 | -- | -- | -- | -- | -- | -- | 1 | - | 1 | 2 | - | -- | -- | -- | -- | 3 | 4 | 1 | - | - | 3 |
| 29. | வேலூர் | 4 | -- | -- | 2 | -- | -- | 1 | 1 | - | 1 | 6 | ***1 | 2 | -- | 1 | 1 | 11 | 15 | 1 | - | - | 4 |
| 30. | விழுப்புரம் | 4 | -- | -- | -- | -- | -- | -- | 1 | - | 1 | 7 | -- | -- | 1 | -- | -- | 16 | 9 | 1 | 1 | 1 | 2 |
| 31. | விருதுநகர் | 2 | -- | -- | -- | -- | -- | -- | -- | - | 1 | 4 | -- | -- | -- | -- | -- | 4 | 7 | 1 | 1 | - | 2 |
| | **மொத்தம்** | **83** | **4** | **2** | **8** | **7** | **4** | **10** | **30** | **7** | **29** | **122** | **14** | **5** | **6** | **9** | **11** | **176** | **193** | **42** | **19** | **10** | **64** |
| | | **மாவட்ட நீதிபதி நிலை –155** | | | | | | | | | **முதுநிலை உரிமையியல் நீதிபதி– 196** | | | | | | | **உரிமையியல் நீதிபதி –504** | | | | | |
| | | **மொத்த நீதிமன்றங்களின் எண்ணிக்கை – 855** | | | | | | | | | | | | | | | | | | | | | |

* போதை மருந்துகள் மற்றும் மன மயக்கப் பொருட்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் இயங்கும் இரண்டு தனி நீதிமன்றங்கள் உட்பட

# ஒரு கூடுதல் மகளிர் நீதிமன்றம் உட்பட (குற்றவியல் நடுவர் தரத்தில்)

** இனக் கலவர வழக்கு தொடர்பான நீதிமன்றம்

## முதலீட்டாளர்கள் பாதுகாப்புச் சட்டம் தொடர்பான ஒரு தனி நீதிமன்றம் உட்பட

*** மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தீர்ப்பாயம்

**பிற்சேர்க்கை – 4**

*(பத்தி 10(ப) –வைக் காண்க.)*

## நில அபகரிப்பு வழக்குகளுக்கான தனி நீதிமன்றங்களின் விவரம்

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | இடம் | நீதிமன்றங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | சென்னை | சென்னை மாநகரம் | 2 |
| 2. | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | 1 |
| 3. | கடலூர் | கடலூர் | 1 |
| 4. | தருமபுரி | தருமபுரி | 1 |
| 5. | ஈரோடு | ஈரோடு | 1 |
| 6. | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் | 1 |
| 7. | கரூர் | கரூர் | 1 |
| 8. | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி | 1 |
| 9. | மதுரை | மதுரை மாநகரம் | 1 |
| 10. | நாமக்கல் | நாமக்கல் | 1 |
| 11. | பெரம்பலூர் | பெரம்பலூர் | 1 |
| 12. | புதுக்கோட்டை | புதுக்கோட்டை | 1 |
| 13. | இராமநாதபுரம் | இராமநாதபுரம் | 1 |
| 14. | சேலம் | சேலம் மாநகரம் | 1 |
| 15. | தஞ்சாவூர் | தஞ்சாவூர் | 1 |
| 16. | நீலகிரி | உதகமண்டலம் | 1 |
| 17. | தேனி | தேனி | 1 |
| 18. | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி மாநகரம் | 1 |
| 19. | தூத்துக்குடி | தூத்துக்குடி | 1 |
| 20. | திருநெல்வேலி | திருநெல்வேலி மாநகரம் | 1 |
| 21. | திருப்பூர் | திருப்பூர் | 1 |
| 22. | திருவள்ளூர் | திருவள்ளூர் | 1 |
| 23. | விழுப்புரம் | விழுப்புரம் | 1 |
| 24. | விருதுநகர் | விருதுநகர் | 1 |
| | | **மொத்தம்** | **25** |

## பிற்சேர்க்கை –5

*(பத்தி 11 – ஐக் காண்க)*

### சென்னை உயர்நீதிமன்ற முதன்மை ஆயத்தில் தொடுக்கப்பட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகள், தீர்க்கப்பட்ட மற்றும் நிலுவையிலுள்ள வழக்குகள் குறித்த அட்டவணை

| வ. எண் | ஆண்டு | *உரிமையியல் வழக்குகள்* | | | | *குற்றவியல் வழக்குகள்* | | | | நிலுவையில் உள்ள மொத்த உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஆரம்ப இருப்பு | புது வழக்குகள் | தீர்க்கப் பட்டவை | நிலுவை | ஆரம்ப இருப்பு | புது வழக்குகள் | தீர்க்கப் பட்டவை | நிலுவை | |
| 1. | 01-01-2009 முதல் 31-12-2009 | 343493 | 124860 | 151822 | **316531** | 33111 | 52350 | 56643 | **28818** | 345349 |
| 2. | 01-01-2010 முதல் 31-12-2010 | 316531 | 134681 | 132061 | **319151** | 28818 | 48998 | 43593 | **34223** | 353374 |
| 3. | 01-01-2011 முதல் 31-12-2011 | 319151 | 128799 | 124709 | **323241** | 34223 | 51626 | 44015 | **41834** | 365075 |
| 4. | 01-01-2012 முதல் 31-12-2012 | 323241 | 131320 | 123939 | **330622** | 41834 | 51228 | 48646 | **44416** | **375038** |
| 5. | 01-01-2013 முதல் 31-12-2013 | 330622 | 130851 | 94317 | 367156 | 44416 | 54795 | 56313 | 42898 | **410054** |

## பிற்சேர்க்கை – 6

*(பத்தி 11 – ஐக் காண்க)*

### சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தொடுக்கப்பட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகள், தீர்க்கப்பட்ட மற்றும் நிலுவையிலுள்ள வழக்குகள் குறித்த அட்டவணை

| வ. எண் | ஆண்டு | *உரிமையியல் வழக்குகள்* | | | | *குற்றவியல் வழக்குகள்* | | | | நிலுவையில் உள்ள மொத்த உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஆரம்ப இருப்பு | புது வழக்குகள் | தீர்க்கப் பட்டவை | நிலுவை | ஆரம்ப இருப்பு | புது வழக்குகள் | தீர்க்கப் பட்டவை | நிலுவை | |
| 1. | 01-01-2009 முதல் 31-12-2009 | 65049 | 50996 | 38068 | 77977 | 9843 | 22011 | 23790 | 8064 | **86041** |
| 2. | 01-01-2010 முதல் 31-12-2010 | 77977 | 53047 | 48798 | 82226 | 8064 | 28216 | 23712 | 12568 | **94794** |
| 3. | 01-01-2011 முதல் 31-12-2011 | 82226 | 56602 | 46233 | 92595 | 12568 | 29308 | 25810 | 16066 | **108661** |
| 4. | 01-01-2012 முதல் 31-12-2012 | 92595 | 58905 | 45053 | 106447 | 16066 | 31385 | 28562 | 18889 | **125336** |
| 5. | 01-01-2013 முதல் 31-12-2013 | 106447 | 66197 | 49417 | 123227 | 18889 | 37079 | 31770 | 24198 | **147425** |

## பிற்சேர்க்கை –7

*(பத்தி 11 – ஐக் காண்க)*

### மாநிலத்திலுள்ள சார்நிலை நீதிமன்றங்களில் தொடுக்கப்பட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகள், தீர்க்கப்பட்ட மற்றும் நிலுவையிலுள்ள வழக்குகள் குறித்த அட்டவணை

| வ. எண் | ஆண்டு | *உரிமையியல் வழக்குகள்* | | | | *குற்றவியல் வழக்குகள்* | | | | நிலுவையில் உள்ள மொத்த உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஆரம்ப இருப்பு | புது வழக்குகள் | தீர்க்கப் பட்டவை | நிலுவை | ஆரம்ப இருப்பு | புது வழக்குகள் | தீர்க்கப் பட்டவை | நிலுவை | |
| 1. | 01-01-2009 முதல் 31-12-2009 | 576066 | 857059 | 789015 | **644110** | 440532 | 698114 | 687859 | **450787** | 1094897 |
| 2. | 01-01-2010 முதல் 31-12-2010 | 644110 | 1042385 | 936249 | **750246** | 450787 | 797317 | 756980 | **491124** | 1241370 |
| 3. | 01-01-2011 முதல் 31-12-2011 | 750246 | 929156 | 963700 | **715702** | 491124 | 669013 | 692590 | **467547** | 1183249 |
| 4. | 01-01-2012 முதல் 31-12-2012 | 715702 | 921450 | 858516 | **778636** | 467547 | 627654 | 641368 | **453833** | **1232469** |
| 5. | 01-01-2013 முதல் 31-12-2013 | 778636 | 969355 | 904787 | **843204** | 453833 | 930547 | 939269 | 445111 | **1288315** |

*******